Registered as a NewsPaper


விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் - 15 | திருவள்ளுவர் ஆண்டு - 2035 | மார்கழி-10 | 25-12-2004 | சனிக்கிழமை | ஓசை - 311


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-10931) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## கைதாகிக் காணாமற்போனோர் விவகாரம்

## சட்டத்தரணிகளின் அசமந்தத்தை கண்டித்து மறியல் போராட்டம்!

(வடமராட்சி)

1996/1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோரது விவகாரத்தில் தமிழ்சட்டத்தரணிகள், காட்டிவரும் அசமந்தப் போக்கைக் கண்டித்து யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியுடன் இணைந்து காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் மறியற் போராட்டமொன்றை நேற்று நடாத்தியது.

யாழ்.நகரின் 3 ஆம் குறுக்குத் தெருவிலுள்ள (12ஆம் பக்கம் பார்க்க)

## நத்தார் வாழ்த்துக்கள்

ஈழநாதம் வாசகர்கள் விநியோகஸ்த்தர்கள் விளம்பரதாரர்கள் உட்பட அனைத்துத் தமிழீழ மக்களுக்கும் நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்துகொண்ட


# கொடிகாமம் மனித சங்கிலிப் போராட்டம்!

## தென்மராட்சியில் மூன்றாவது எழுச்சி நிகழ்வு

(தென்மராட்சி)

**தென்மராட்சிப் பகுதியில் பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்றாவது கட்ட மக்கள் எழுச்சிப் போராட்டம் நேற்றுக் கொடிகாமத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. இப்போராட்டத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் பங்கேற்று சமாதானத்தை வலியுறுத்தியும் போர் ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா அரசைக் கண்டித்தும் கோசமிட்டனர்.**

அமைதியை வலியுறுத்தியும் அரசின் போர்முனைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும்நூற்றுக்கணக்கான, சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை மக்கள் தாங்கி நின்றனர். சரியாக தாயக நேரம் 10.00 மணிக்கு தென்மராட்சி அனைத்து வர்த்தக சங்கங்களின் பிரதிநிதி சற்குணராசா அவர்கள் தலைமையில் கொடிகாமம் பெற்றோல் நிரப்பும் நிலையத்தில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு 10.30 மணியளவில் கண்டன எதிர்ப்புக் கூட்டம் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநேசன், கஜேந்திரன், மற்றும் தென்மராட்சி மகளிர் அமைப்பின் பிரதிநிதி தங்கரத்தினம் ஆகியோர் உரையாற்றினர். இப்போராட்டத்தில் பெருந்தொகையான வர்த்தகர்கள், சந்தைவியாபாரிகள், ஆட்டோ ஓட்டுநர்கள், பிரதேச சபை ஊழியர்கள், கூட்டுறவுச்சபை ஊழி (12ஆம் பக்கம் பார்க்க)



படம் : ஆன்சலின்

## யாழ்.இல் பொங்கு தமிழ் நிகழ்விற்கு பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு

அடுத்த மாதத்தின் பிற்பகுதியில் யாழ். குடாநாட்டில் பொங்கு தமிழ் நிகழ்வை நடத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ். பல்கலைக்கழக சமூகம் மேற்கொண்டு வருகிறது.

இடைக்கால நிர்வாக வரைபை வழங்கக் கோரி கடந்த திங்கள் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள மக்கள் போராட்டம் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தென்மராட்சியில் நடைபெற்ற போராட்டங்களையடுத்து வடமராட்சிப் பகுதியினில் 29ஆம் திகதி புதன்கிழமை, பருத்தித்துறை பழைய நகரப் பகுதினில் மாபெரும் மனித சங்கிலிப் போராட்டமும், கண்டனக் கூட்டமும் நடாத்தப்படவுள்ளது. அதற்கு முதல் நாளான செவ்வாய்க் கிழமை புங்குடுதீவுப் பகுதியில் இப் போராட்டம் இடம்பெறவுள்ளது. அதே போன்று தீவகம் மற்றும் (12ஆ பக்கம் பார்க்க)

## சீனாவிடமிருந்து ஆயுதங்கள் வாங்கக் கூடாது சிறிலங்காவுக்கு அமெரிக்கா அறிவுறுத்தல்

சிறிலங்கா படைப்பலத்தை அதிகரிப்பதற்காக சீனாவிடமிருந்து ஆயுதங்கள், யுத்த தளபாடங்கள் கொள்வனவு செய்வதை சிறிலங்கா உடனடியாக நிறுத்தவேண்டுமென்று அமரிக்கா அறிவுறுத்தலொன்றினை பிறப்பித்துள்ளது. சிறிலங்கா நீண்ட காலமாக சீனாவிடமிருந்து கடன் அடிப்படையிலும், ஒப்பந்த அடிப்படையிலும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வருகிறது. இவை அனைத்தையும் உடனடியாக நிறுத்துமாறு அமரிக்கா அறிவுறுத்தியுள்ளது. அண்மையில் சிறிலங்காவின் கடற்படைக்கு சீனாவிடமிருந்து அமெரிக்கா ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முற்பட்டபோதே இந்த அறிவுறுத்தல் வந்ததாக இராணுவத் தரப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன. சீன நாட்டின் இராணுவ அதிகாரிகளின் இரகசிய இலங்கைக்கான பயணமும், ஜே.வி.பி அமைப்பினரின் சீனாவுடனான இரகசியமான தொடர்புகளும் இதற்குக் காரணமாகலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. சீனாவிற்கும் ஜே.வி.பி.யினருக்கும் இடையிலான இரகசியத் தொடர்புகள் தொடர்பாக அண்மையில் நோர்வேயின் பிரதமரிடம் பத்திரி (12ஆம் பக்கம் பார்க்க)

## சிறில.விமானப் படைக்கு விமானத் தளம் காலியில் அமைப்பதற்கு நடவடிக்கை

சிறிலங்கா விமானப் படைக்கென சர்வதேச தரத்தில் புதிய சர்வதேச யுத்த விமானத்தளம் நிறுவப்பட இருப்பதாகத் தெரியவருகிறது. சிறிலங்காவில் முதல் தடவையாக நிறுவப்பட இருக்கும் இந்த சர்வதேச விமானத்தளமானது காலி மாவட்டத்திலுள்ள கபறாதுவ என்ற பிரதேசத்தில் நிறுவப்படலாமென்று தெரியவருகிறது. இந்தப் பிரதேசத்திலுள்ள ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பு தற்போது அமெரிக்க இராணுவ ஆய்வாளர்களால் இனங்காணப்பட்டுள்ளதாகவும், இந்தப் பிராந்தியத்தில் யுத்த விமானங்களுக்கான காலநிலை மாற்றங்கள் தொடர்பாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் இவை சாதகமான நிலையினைக் காட்டுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (12ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவுடன் இரகசிய ஒப்பந்தம் ஜே.வி.பி கைச்சாத்திட்டது

(கொழும்பு)

சிறிலங்கா ஆளும் அரசியல் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து இயங்கிவரும் ஜே.வி.பி யினர் சீனா நாட்டுடன் இரகசிய வர்த்தக ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதன் மூலம் எதிர் காலத்தில் ஜே.வி.பி யினர் மீண்டும் தென்னிலங்கையில் யுத்தத்தில் ஈடுபடுவதற்கு ஆயுத உதவிகளைச் சீனாவிடமிருந்து பெற்றுக்கொள்ள இருப்பதாக அவுஸ்திரேலியாவில் வாழ்ந்துவரும் ஜே.வி.பி யின் மத்திய குழு உறுப்பினர் லயனல் போபகே சக தோழர் ஒருவருக்குத் தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக சீனாவின் அழைப்பினை ஏற்று ஜே.வி.பி யின் மத்திய குழு உறுப்பினரும், காணி வள விவசாயத்துறை அமைச்சருமான சுனில் என்பவர் தற்போது சீனா சென்றுள்ளதாகவும் இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வெண்சங்கு நூல் வெளியீட்டு விழா

வவுனியா மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கத்தினால் இன்று நூலியல் வரலாற்றில் புதிதாய் தடம் பதிக்கும் வெண்சங்கு நூல் வெளியீட்டுவிழா நடாத்தப் படவுள்ளது.

வவுனியா முத்தையா மண்டபத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு வவுனியா மாவட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் ச.சஞ்ஜீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நூல் வெளியீட்டுவிழாவில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் கலந்து கொள்வார்.

(10)


### வரிவிளம்பரம்

**விற்பனைக்குண்டு**

நல்ல நிலையில் மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு உண்டு. இல.4சிறி4611 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி. எஸ்.அருள்நாதன், இல.117, நாதன்ஸ் குட்செட்செட்றோட், வவுனியா. (சி -5410)


## தவறிவிட்டது

செல்வராசா முரளி என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளிட்ட பேஸ் 23.12.2004 அன்று பரந்தனுக்கும், பளைக்கும் இடையில் தவறிவிட்டது. இதனை ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (சி -5442)


## பணிநிலை வெற்றிடம்

### கோடன் தானியங்கிப் பொறியியல் நிறுமம்

**கோடன் தானியங்கிப் பொறியியல் நிறுமத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலையில் வெற்றிடம் உள்ளது.**

**ஊர்தித் தூய்மிப்பாளர் :**

அகவை : 18 - 40 வரை.

கல்வித்தகைமை : ஆண்டு 08 தேறியிருத்தல்.

ஏனைய தகைமை : ஊர்திப் பேணுகைப் பணியிலும், ஊர்தித்தூய்மிப்புப் பணியிலும் பணிப் பட்டறிவு உள்ளவர்களும் விரும்பத்தக்கது.

நேர்முகத்தேர்வு :-

காலம் : 30.12.2004 (வியாழக்கிழமை)
நேரம் : காலை . 10.30 மணிக்கு
இடம் : கோடன் தானியங்கிப் பொறியியல நிறுமம்,யாழ்சாலை, பரந்தன்.

கொண்டு வரவேண்டிய ஆவணங்கள் :
அடையாளஅட்டை,குடும்ப அட்டை,பணிப்பட்டறிவுச் சான்றிதழ்கள்.

ஆளுகை
கோடன் தானியங்கிப் பொறியியல் நிறுமம். (5339)




## 5ஆம் ஆண்டு நினைவில்



கடற்சிறுத்தை கரும்புலி
மேஜர் நந்தன்
தர்மராஜா தயாளன்
(இல.29 குமரபுரம்,பரந்தன்)

உடன் பிறப்பே எங்கள்
உதிரத்தில் உறைந்துவிட்ட
உணர்வலையே! -நீ
அகிலத்தை வென்றுவிட்டாய்.
ஆர்ப்பரிக்கும் அலைநடுவில்
ஆர்த்தெழுந்த இளஞ்சிட்டே
தமிழீழ தேசத்தின் மாவீரர்
குழந்தையாய் பிறப்பெடுத்தாய்.
காற்றுடனே காற்றென
கடலிற்குள் அலையென
கடற்கரும்புலிகள் அணி சேர்ந்து
கலங்கரை விளக்காகி விட்டாய்
காவியத் திருமகனே!
காலங்கள் பல கடந்தாலும்
மறந்திடாது எமதுள்ளம்



(சி -1156)



## 61ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



அன்புச்சோலை மூதாளர் பேணலக மூதாளர் வில்சன் யூலியட்மாகிரெட்றோஸ் மாவீரர் ரவிசங்கரின் தாயார் அவர்களின் 61ஆவது பிறந்தநாளினை அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் 25.12.2004 ஆம் திகதி சனிக்கிழமை வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது. அன்னாரை அன்புச்சோலை மூதாளர் பேணலக மூதாளர்கள், மேலாளர்கள், பணிப்பாளர்கள்,பணியாளர்கள் அனைவரும் இயேசுநாதரின் கிருபையால் உடல் நலம் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

தகவல்:-
செ. கிரிதரன்,
இயக்குனர்.
அன்புச்சேலை மூதாளர் பேணலகம்,
கனகபுரம், கிளிநொச்சி.

(சி-10994)



## தையல் பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒரு வருட கால தையல் டிப்ளோமாக் கற்கை நெறி 01-01-2005 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் பங்குகொள்ள விரும்புகின்றோர் 31-12-2004 ஆம் திகதிக்கு முன்னர் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

குறிப்பு : பயிற்சிக் காலத்திற்கான கொடுப்பனவும் வழங்கப்படும்

செ. தயானந்தா
உதவி அரசாங்க அதிபர்,
பிரதேச செயலர்,
புதுக்குடியிருப்பு.

(சி-10537)



## முக்கிய அறிவித்தல்

### வருடாந்த பொதுக்கூட்டம்-2004

எதிர்வரும் 2004.12.30 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதினால். மீளாய்வு செய்யப்பட்டு உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும், நெறியாளர் குழு உறுப்பினர்களையும் தவறாது இப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

01. பொதுச்சுடர் ஏற்றல்
02. கொடி ஏற்றல்
03. அகவணக்கம்
04. தலைவர் தலைமையுரை
05. உதவி ஆணையாளர் உரை
06. புதிய முதலீடுகளுக்கான அங்கீகாரம்
07. புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு
08. சிறப்புரை
09. ஏனைய விடயங்கள்
10. நன்றியுரை

கி.பாஸ்கரன்
வ.பி.பா.ஊ.கூ.சங்கம்
பரந்தன்.

க.சி.மணியம்
செயலாளர்
வ.பி.பா.ஊ.கூ.சங்கம்
பரந்தன்.

(சி.10993)


## செயலமர்வு

(அலுவலக செய்தியாளர்)

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான தரம்-7 புவியியல், வரலாறு, குடிசார்கல்வி ஆகிய பாடங்களிற்குரிய செயலமர்வு துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதிமுதல் 29 ஆம் திகதி வரை 3 நாட்கள் நடைபெறவுள்ள செயலமர்வில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் வேண்டியுள்ளார்(சோ)

## பாடரீதியான செயலமர்வு ஆரம்பம்

2005 ஆம் ஆண்டு கா.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற கணித விஞ்ஞானப் பிரிவு மாணவர்களிற்கான பாடரீதியான செயலமர்வு மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்களால் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் நேற்றுப் பி.ப 2.00 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது. 27.12.2004 வரை நடைபெறவுள்ள செயலமர்வுகளில் இன்று இலத்திரனியல் பாடநெறியும், நாளை பௌதீகவியல் பாடநெறியும், நாளை பி.ப 2.00 மணிக்கு தொழில் ரீதியாக மாணவர்கள் தமது கல்வித் துறையை தெரிவதற்கான கருத்தரங்கும், 27 ஆம் திகதி இணைந்த கணிதத்திற்கும் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன. மு.பகல் 8.00 மணிக்கு ஆரம்பமாகும் மேற்படி செயலமர்வுகளில் கலந்து பயன் பெறுமாறு சம்பந்தப்பட்ட அனைத்து மாணவர்களும் கேட்டுக்கொள்ளப் படுகின் றனர்.

(08)


## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தால் அனைவருக்கும் பயன்தரக் கூடிய விதத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்ற புத்தகக்கண்காட்சியும். விற்பனையும் நூலகங்கள். பிரதேச சபைகளின் பயன்கருதி டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது. சிற்பம். வைத்தியம் உள்ளிட்ட பல புதிய வெளியீடுகளையும் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி- 021-2222573

(சி.11638)



## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சரும நோய்கள், மாத விடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப் பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோ கங்களில் பிரபல்ய மானவர்கள் போன்ற சகல வியாதிகளையும் குணப் படுத்து பவர்.

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121.02 ஆம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 222 2459

(சி11019)

# இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் இரண்டையும் நாம் ஒரே கண்ணோட்டத்தில் பார்ப்பதில்லை

## பத்திரிகைப் பேட்டியில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர்

(வோஷிங்டன்)

**இந்தியாவையும் பாகிஸ்தானையும் நாம் ஒரே கண்ணோட்டத்தில் பார்ப்பதில்லை ஆனால் இரண்டுமே எங்களின் உதவிகளை நாடி நிற்கின்றன என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக கிறிஸ்டியன் சயன்ஸ்மொனிட்டர் பத்திரிகைக்கு புதன்கிழமை அளித்தபேட்டியில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் கூறியதாவது: இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளும் பொதுவான விடயங்களில் எங்களிடம் உதவிகேட்டு வருகின்றன. நாங்களும் எங்களால் ஆன உதவியை இரு நாடுகளுக்கும் செய்து வருகின்றோம்.

நாங்கள் இந்தியா, பாகிஸ்தான் இரண்டையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்ப்பதில்லை. இந்தியா மிகப்பெரிய சனநாயக நாடு. அதன் தேவைகளைப் பொறுத்து அவற்றிற்கு நாங்கள் புதிய உத்திகளின் அடிப்படையில் உதவி செய்து வருகிறோம். அதேபோல் பாகிஸ்தானை நாங்கள் தனியாக அணுகி வருகிறோம். அவர்கள் எங்கள் உதவியை நாடிவரும்போது அதை பரிசீலித்து முடிந்தவரை உதவி வருகிறோம்.

பல ஆண்டுகளாக நாங்கள் இந்தியாவுடன் சுமுகமான உறவை வைத்திருக்கிறோம். பாகிஸ்தானுடனும் எங்களுக்கு நல்லுறவு உள்ளது. சர்வதேச பயங்கரவாதி ஒஸாமா பின்லேடனின் இருப்பிடம் பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்புக்குத் தெரிந்திருக்குமானால் நிச்சயம் லேடனைக் கைது செய்ய அவர் எங்களுக்கு உதவுவார் என்றும் கொலின்பவல் குறிப்பிட்டார்.

## எண்மர் பலி

சீனாவில் ஹுனான் மாகாணத்தில் லிலிங் நகரில் விவசாயி லீ என்பவரது வீட்டில் வியாழக் கிழமை ஏற்பட்ட வெடிவிபத்தில் 8பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார் இவ்விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை.

## உலகில் மிகப்பெரும் பனிக்கட்டிச் சிற்பம்



சீனாவின் ஜிலிங் மாகாணத்தில் இப்போது கடும் பனிப்பொழிவு நிலவுகிறது. ஆறுகளில் தண்ணீர் உறைந்து பனிக்கட்டிகளாகக் காட்சி அளிக்கின்றன. இந்தப் பனிக் கட்டியை பயன்படுத்தி ஒரு சிற்பக் கலைஞர் அதிசய பனிச் சிற்பத்தை உருவாக்கி இருக்கிறார்.

இந்த பனிச் சிற்பம் 80 மீற்றர் நீளம் உள்ளது. இதை உருவாக்க 7 ஆயிரம் கன மீற்றர் பனிக்கட்டி தேவைப்பட்டது. உலகிலேயே மிகப் .பெரிய பனிக்கட்டிச் சிற்பம் இதுதான்.

# இந்திய இராணுவத் தளபதி சீனாவிற்கு ஒருவார காலப் பயணம்

(பீஜிங்)

சீனாவில் ஒருவார பயணம் மேற்கொண்டுள்ள இந்திய இராணுவத்தளபதி விஜ் சீன இராணுவ்த்தைப் பார்வையிட்டார். மேலும் சீன அதிகாரிகளுடன் ஆலோசனையும் நடத்தினார். இருதரப்பு உறவை வலுப்படுத்தி பரஸ்பர நம்பிக்கையை வளர்க்கும் நோக்கில் சீனாவிற்கு அவர் பயணம் மேற்கொண்டுள்ளார். புதன்கிழமை ஷாங்காய் வந்தடைகின்றார். விஜ் குயிட்டோ, ஜியான் ஆகிய துறைமுக நகரங்களுக்கும் செல்கின்றார். கடந்த 10 ஆண்டுகளில் சீனா செல்லும் முதலாவது இந்திய இராணுவத்தளபதி விஜ் இவருக்கு முன்னதாக 1994இல் அப்போதைய தளபதி பி.சி.ஜோஷி, சீனா சென்றிருந்தார்.

இந்த வார இறுதியில் பீஜிங்குக்குச் செல்கிறார் விஜ். அங்கு சீன இராணுவத்தளபதி ஜெனரல் லியாங் குவாங்லியைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவதுடன் முக்கியப் பிரமுகர்களையும் சந்திக்கவிருக்கிறார்.

# ஜேர்மனியில் முஸ்லிம் பள்ளிவாசல் விசமிகளால் தீ வைத்து எரிப்பு!

## -நெதர்லாந்தையடுத்து 2 ஆவது சம்பவம்

(பெர்லின்)

ஜேர்மனியிலுள்ள மசூதியொன்றுக்கு விசமிகள் தீ வைத்ததில் அம் மசூதி சேதமானது. இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

நெதர்லாந்து நாட்டில் முஸ்லிம்களை விமர்சித்து சினிமாப் படம் எடுத்த ஒரு டைரக்டரைத் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர். இதைத் தொடர்ந்து அந்த நாட்டில் சின்ஷேய்ம் என்ற நகரில் ஒரு மசூதி மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டது. இதில் மசூதியின் நுழைவுவாயில் முற்றிலும் அழிக்கப்பட்டது. இந்தச்சம்பவம் கடந்த மாதம் நடந்தது.

இதைத்தொடர்ந்து இப்போது ஜேர்மனியிலும் மசூதி மீது தாக்குதல் நடந்துள்ளது. அந்த நாட்டில் பிராங்க்பர்ட் அருகே உள்ள உசிங்கன் என்ற சிறிய நகரத்தில் இந்தச் சம்பவம் நடந்தது.

35 ஆயிரம் பேர் மட்டுமே வசிக்கும் அந்த நகரத்தில் ஒரு மசூதி உள்ளது. அதிகாலையில் அந்த மசூதி திடீர் எனத் தீப் பிடித்து எரிந்தது.

அந்த வழியாக காரில் சென்ற ஒருவர்தான் தீயைப் பார்த்து விட்டு தீ அணைப்புப் படைக்குத் தகவல் கொடுத்தார். தீ அணைக்கும் படையினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர்.தீ பிடித்ததற்கான காரணம் தெரியவில்லை. விசமிகள் யாராவது தீ வைத்து இருக்கலாம் என்று பொலிசார் சந்தேகிக்கின்றார்கள். மசூதியின் முதல் மாடியில் தான் தீப்பிடித்தது. இதில் கட்டடம் சேதம் அடைந்தது. சேதமதிப்பு 70 இலட்சம் ரூபாய் ஆகும். இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

# குழந்தைகளுக்கு நிதி திரட்ட கிறிஸ்மஸ் தாத்தாக்களின் பேரணி

(லண்டன்)

இங்கிலாந்தில் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு குழந்தைகளுக்கு நிதி திரட்டும் நோக்கில் கிறிஸ்மஸ் தாத்தாக்களின் மோட்டார் வாகன பேரணி நடைபெற்றது. இதில் 2600 கிறிஸ்மஸ் தாத்தாக்கள் பற்குபற்றினர். இவர்கள் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் பேரணியில் கலந்து கொண்டனர். கின்னஸ் சாதனை படைக்கும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் இப்பேரணியில் கிறிஸ்மஸ் தாத்தாக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையால் சாதனை படைக்கவில்லை. ஆயினும் இப்பேரணி மூலம் சேர்க்கப்பட்ட நிதி பவ்வேறு சேவை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

# கலிபோர்னியா ஆளுநர் மீது ரூ.70 கோடி மோசடி வழக்கு

(வோஷிங்டன்)

கலிபோர்னியா மாநில ஆளுனரும் சினிமா நடிகருமான அர்னால்டு ஸ்வார்ஸ் நேக்கர், அவர் மனைவி மரியா ஆகியோர் எழுபது கோடி ரூபாய்க்கு மோசடி செய்து விட்டதாக ஒரு பெண் வக்கீல் வழக்குத் தொடர்ந்து இருக்கின்றார்.

ஹொலிவுட் சினிமா உலகின் சூப்பர் ஸ்டாராக இருந்தவர் அர்னால்டு ஸ்வார்ஸ்நேக்கர். இவர் குடியரசுக் கட்சியில் சேர்ந்து கலிபோர்னியா கவர்னர் ஆகிவிட்டர். இவரும் இவர் மனைவி மரியா ஷ்ரிவரும் தங்கள் பண்ணை வீட்டை சூசன் லோகன்ஸ் என்ற பெண் வக்கீலுக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் விற்றனர். அந்த வீட்டில் கட்டுமானக் கோளாறுகள் உள்ளன. அதைப் பழுது பார்க்காமலும், அது பற்றி தெரிவிக்காமலும் விற்றதன் மூலம் எழுபது கோடி ரூபாய்க்கு என்னை மோசடி செய்து விட்டனர் என்று கூறி அர்னால்டு தம்பதிகள் மீது சூசன் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார். நீச்சல் குளம் டென்னிஸ் கோர்ட்டு, ஸ்கிரீனிங் ரூம் ஆகியவற்றில் ஏற்பட்ட சேதத்துக்கு நஷ்ட ஈட்டுத் தொகையும், வழக்குச் செலவுத் தொகையும் தரவேண்டும் என்று கோரி வக்கீல் சூசன் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார்.

# சூடானின் சொத்துக்களை முடக்க அமெரிக்க சனாதிபதி ஒப்புதல்

(வோஷிங்டன்)

சூடானின் சொத்துக்களை முடக்கக் கோரும் சட்டத்தில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கைச்சாத்திட்டுள்ளார்.

அரச அதிகாரிகள், அரச வர்த்தக திட்டங்கள் என்பவை மீதான தடையை உடனடியாகச் செயற்படுத்துவதா? என்பது பற்றி ஆராய்ந்து வருவதாக அமெரிக்க சனாதிபதி நிர்வாகம் அறிவித்துள்ளது. சூடானின் மேற்குப்பகுதியில் இடம்பெறும் வன்முறைகளைக் கண்டிக்கும் வகையில் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டர்பூர் பிராந்தியத்தில் தொடரும் வன்முறைகளால் ஆயிரக் கணக்கான சூடானியர்கள் கொல்லப்பட்டும், பாதிக்கப்பட்டும் உள்ளனர்.வன்முறைகளை நிறுத்த எடுக்கப்படும் முயற்சிகள் பயனற்றவையாக அமைந்து வருவதையிட்டு உலக நாடுகள் பலவும் தமது கண்டனங்களை வெளியிட்டு வருகின்றன.

## அமெரிக்க பாதுகாப்பமைச்சர் மொசூல் நகருக்கு திடீர்விஜயம்

அமெரிக்க பாதுகாப்பமைச்சர் டொனால் ரம்ஸ்பீல்ட் ஈராக்கின் மொசூல் நகரிற்கு திடீரென விஜயம் செய்துள்ளார்.

நத்தார் பண்டிகைக் காலத்தில் தமது துருப்பினருக்கு உற்சாகம் ஊட்டவேண்டும் என்பது அவரது கருத்தாகும். மொசூல் நகரில் அமைந்துள்ள அமெரிக்கப் படைத்தளம் மீது நடத்தப்பட்ட மோசமான தாக்குதலின் பின்னர் பாதுகாப்பமைச்சரின் விஜயம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதேவேளை ஈராக்கில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மொசூல் நகரில் அமெரிக்கப்படைத்தளம் மீது தீவிரவாதிகள் நடத்திய பீரங்கி மற்றும் ரொக்கற் தாக்குதல்களில் 18 அமெரிக்கப்படையினர் உட்பட 22 பேர் கொல்லப்பட்டும், 70 இற்கும் அதிகமானோர் காயமடைந்திருந்தமையும் ஈராக்கில் அமெரிக்கப்படையினர் சந்தித்த மிகப்பெரிய இழப்பு என்பதும் தெரிந்ததே.

## மேற்குக் கரையில் மாநகரசபைத்தேர்தல்

சுமார் 30 ஆண்டுகளின் பின்னர் நடைபெற்ற மேற்குக்கரை மாநகரசபை தேர்தலுக்கான வாக்களிப்பில் பலஸ்தீனர்கள் வாக்களித்துள்ளனர். இம்முறை அதிகமான வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பெறுபேறுகள் இன்று வெளியாகுமெனதெரிவிக்கப்பட்டுள்ளது




அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களச் செயலாளர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் மொசூலில் அமெரிக்கப் படையினரைச் சந்தித்துள்ளார். மொசூலில் அமெரிக்கப் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டு மூன்று நாட்களிற்குப் பின்னர் பாதுகாப்புச் செயலாளர் நத்தார்ப் பண்டிகைக்கான ஆச்சரியப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

# தமிழர் படைப்பலத்தைப் பெருக்க இளைஞர்,யுவதிகள் முன்வரவேண்டும்

## -பரந்தன் தே.எழுச்சிப் பேரவை அறிக்கை

(அலுவலக செய்தியாளர்)

**இந்தக் கடினமான இக் காலத்தில் தேசத்தின் தேவையறிந்து எமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க எமது படைப்பலத்தைப் பெருக்க இளைஞர்கள், யுவதிகள் முன் வரவேண்டும் எனபரந்தன் தேசிய எழுச்சிப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கேட்டுக் கொண்டுள்ளது.**

மீண்டும் ஒரு போரை எமது மக்கள் மீது திணிப்பதற்கு எதிரியானவன் திட்டமிட்டு வருகின்றான் நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பெண் போராளிகள் உட்பட 50 போராளிகள் வன்னிக்குச் செல்வதற்காக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவி னருடன் வந்த சமயம் இராணுவத் தினர் அவர்களின் இடுப்புப் பட்டியினைக்கழற்றினால் மட்டுமே பயணத்தினை மேற்கொள்ளலாம் என நிபந்தனை விதித்தமையால் ஏற் பட்ட இழுபறி நிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவி னர் இது ஒன்றும் புதிய நடவடிக் கையல்ல வழமையான செயல் பாடுதான் என எடுத்துக் கூறியும் வெறிபிடித்த இராணுவத் தினர் ஏற்றுக் கொள்ளாத நிலையில் பயணத்தினை மேற் கொள்ள முடி யாது போயிற்று.

இப்படியான ஒரு நிகழ்வு எமக்கு ஒன்றும் புதியன அல்ல இந்த இன வெறிபிடித்த ஆட்சி யாளர்களும் இராணுவமும் காலத்திற்கு காலம் முன்னுக்குப் பின் முரணான பேச்சுக்களையும் நடவடிக்கைகளையும் மேற் கொண்டுவருவது வழக்கமான தொன்றாகவேயுள்ளது.

இந்நிலையில் நாம் மாவீரர் களின் கனவை நனவாக்க திட சங்கற்பம் பூணவேண்டும் என அவா மேலும் தெரிவித்துள்ளார். (சோ)

# ஆரம்பக்கல்வியை நிறைவு செய்த பூங்காச் சிறார்கள் கௌரவிப்பு

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் ஊரக வளர்ச்சிப் பணியினரால் நிர்வகிக்கப்பெறும் பூங்காக்களின் ஆரம்பக் கல்வியை நிறைவு செய்த சிறார்களின் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச் சுடரினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார். மங்கல விளங்கினை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாகப் பணிப்பாளர் வின்சன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் மதன்றாஜ் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றி வைத்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை வின்சன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து பூங்காக்களின் இணைப்பாளர் சிறிகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் பொ. கந்தன்னா வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளித் திட்ட இணைப்பாளர் கணேசலிங்கம் ஆகியோர் சிறப்புரைகளை வழங்கினர்.

சிறார்களின் பெயர்களில் வங்கிக் கணக்கு திறக்கப்பெற்று அதற்கான வைப்புப் புத்தகங்கள் அரசியல்துறைப் துணைப் பொறுப்பாளரால் சிறார்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப் பெற்றது.

தொடர்ந்து பூங்கா சிறார்களின் கலை நிகழ்வும் ஆசிரியர்கள் பணியாளர்களின் கலை நிகழ்வும் நடைபெற்றன.

இந் நிகழ்வுகளில் சிறார்களின் பெற்றோர், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# வவு. அரசியல்துறையினர் மக்களுக்கு சமகால அரசியல் நிலை குறித்து விளக்கம்

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தின் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் கிராமம் கிராமமாகச் சென்று மக்களுக்கு விளக்கம் அளித்து வருகின்றனர். கிராமப்புற மக்களை இலக்காக வைத்து அந்த மக்களுக்கு விளக்கத்தையும் விழிப்பையும் ஏற்படுத்தி வருவதாக வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் தெரிவித்துள்ளார். (21)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு இதுவரை நிவாரணம் எதுவும் வழங்கவில்லை

## -திருமலை சமூகசேவை அமைப்புக்கள் குற்றச்சாட்டு

(திருகோணமலை)

மூதூர்-ஈச்சிலம்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான மக்களுக்கு அரசாங்கத்தின்சமூகசேவைகள் திணைக் களம் சமைத்த உணவு மற்றும் நிவாரணங்களைஇன்னும் வழங்கவில்லை என்று திருமலை சமூக சேவை அமைப்புக்கள் குற்றஞ் சாட்டியுள்ளன.

சர்வதேச மற்றும் உள்ளூர் தன்னார்வ தொண்டு அமைப்புக் கள்தான்நிவாரணங்களை வழங்கி வந்தாலும் அவை பாதிக்கப்பட்ட மக்களில்சொற்ப தொகையினரின் ஒருநாள் தேவையைப் பூர்த்தி செய்வதாக அமைந்திருப்பதாக அமைப்புக்கள் தெரிவித்தன."இயற்கை அனர்த்தங்களுக்கு ஆளான மக்களுக்கு அரசின் சமூகசேவைகள் அமைச்சு மூன்று தினங்களுக்கு சமைத்த உணவை வழங்க வேண்டும் .ஆனால் மூதூர்-ஈச்சிலம் பற்றுப் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இன்னும் சமைத்த உணவோ, வேறுநிவாரணங்களோ வழங்கப்படவில்லை" என்று விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன், அங்குள்ள நிலவரம், பற்றிக் கேட்டபோது தெரிவித்தார். யுனிசெப், யு.என்.எச்.சி.ஆர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சோ.ஆ போன்ற சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களும் நிவாரணங்களை வழங்குவதாகவும் சமூகசேவை வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஏ-9 பிரதான வீதிக்கருகில் கழிவுப் பொருட்கள்

## -துர்நாற்றம் வீசுவதாக பயணிகள் புகார்

(அலுவலக செய்தியாளர்)

ஆனையிறவு பகுதியில் ஏ9 பிரதான வீதிக்கருகாமையில் கழிவுப் பொருட்கள் பெருமளவில் கொட்டப்பட்டு வருவதன் காரணமாக வீதியில் பயணிப்பவர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதாகத் தெரியவந்துள்ளது.

கழிப்பொருட்கள் கொட்டப்படுவதற்கென ஆனையிறவு ஏ9 பிரதான வீதியிலிருந்து 500 மீற்றருக்கு அப்பால்கழிவுகள் கொட்டப்படுவதற்கென பிரத்தியேகமாக இடம் ஒதுக்கப்பட்டுள்ள



பொழுதிலும் கழிவுப் பொருட்களை ஏற்றிச் செல்பவர்களினால் மேற்படி பகுதியில் ஏ9 பிரதான வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டுவருவதே அப்பகுதியில் துர்நாற்றம் வீசக் காரணமாக அமைந்துள்ளது.

இதன் காரணமாக அப்பகுதியூடாகப் பயணிப்பவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர். அத்துடன் மேற்படி பகுதியில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதனைத் தடுத்து நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட திணைக் களத்தினர் உடனடி நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமெனவும் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)

# வவுனியா வடக்கு,தெற்கு வலய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பெரும் பிரச்சினை

## கல்விப்பணிப்பாளர்கள் தெரிவிப்பு

(செட்டிகுளம்)

வவுனியா தெற்கு வலயத்தில் கல்வி நிலைகள் சரியான முறையில் முன்னெடுத்துச் செல்வதில் பாரிய பிரச்சினையாக ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதாக வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி. ஓஸ்வேல் தெரிவித்துள்ளார்

இதேவேளை வவுனியா வடக்கு வலயத்தில் போரினால் அழிவுற்றுள்ள பாடசாலைகள் தற்போது ஓரளவு புனரமைக்கப் படுகிற போதும் அந்தப் பிரதேசத்தின் கல்வி நிலை மிகவும் கவலைக்குரியதாக இருப்பதாக வவுனியா வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் தண்டாயுதபாணி தெரிவித்துள்ளார்.இந்த வலயத்தில் 705 ஆசிரியர்கள் தேவையான போதும் இங்கு 411 ஆசிரியர்களே பணியில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். கடந்த கால போர்காரணமாக பாதிப்புக் குள்ளாகியுள்ள மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த முடியாத நிலையில் போஷாக்காலும் அடிப்படை பிரச்சினைகளாலும் உளவியல் தாக்கங்களுக்கும் உள்ளான நிலையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ள அவர்,

வவுனியா வடக்கு வலயத்தில் ஆங்கிலக் கல்வியின் நிலை மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. தற்காலத்தில் ஆங்கிலக் கல்வியின் தேவை மிகவும் முக்கியமானதாக இருக்கின்ற போதும் ஆசிரியர்களின் பற்றாக் குறை காரணமாகவே இந்த நிலைஇருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வடக்கு வலயத்தில் 89 பாடசாலைகள் இருக்கின்ற போதும் நிரந்தரமான ஆங்கில ஆசிரியர்கள் 05 பேர் மட்டுமே தற்போது சேவையாற்றி வருகின்றனர். கடந்த கால பெறுபேற்றினை வைத்துப் பார்க்கின்ற போது 1.3 மாணவர்கள் மட்டுமே ஆங்கில மொழியில்சித்தி யெய்தி இருக்கின்றனர். இது எதிர்காலத்தில் பாரியவிளைவுகளை ஏற்படுத் தக்கூடியதாக இருக்கிறது. எனவே இந்த நிலையினைக் கருத்தில் கொண்டு இந்த ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறையினைத் தீர்ப்பது மிகவும் அவசியமானதாக இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (21)

# 10 அகதிகள் நாடு திரும்பினர்

இந்தியாவிலிருந்து கடந்த புதன்கிழமை 10 இலங்கை அகதிகள் இராமேஸ்வரத் திலிருந்து தலைமன்னார் ஊடாகத் தாயகம் திரும்பினர்.

இவர்களை நேற்றுமுன்தினம் தலை மன்னார் பொலிசார் மன்னார் நீதிமன்றத்தில் முன்நிறுத்தி அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

# விடுபட்ட 143 தொண்டர் ஆசிரியருக்கு டிச. 31 இற்கு முன்நிரந்தர நியமனம்

## -பணிப்பாளர் கே.எல்.எல்.விஜயரத்ன

நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட போது விடுபட்ட 143 தொண்டர் ஆசிரியர்களுக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பு வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஊடாக நிரந்தர நியமனம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் நிர்வாக முகாமைத்துவப் பணிப்பாளர் கே.எல்.எல். விஜயரத்ன, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவத்திடம் புதன் தெரிவித்தார்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் எம் விஜயரத்ன அப்போது தெரிவித்துள்ளதாக ஆ.சங்கத்தினர் கூறியுள்ளனர். (25)





இரணை மடுக்குளத்தின் மேலதிக நீர் வெளியேறும் பகுதியை ஊடறுத்துச் செல்லும் கிளிநொச்சி-வட்டக்கச்சி பிரதான வீதியில் மேற்படி நீர் பெருமளவில் வீதிக்கு மேலாக பாய்ந்ததால் இரு கரைகளிலும் வீதியை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த கொங்றீற் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளதையும் வீதியில் ஏற்பட்டுள்ள பாரிய குழிகளையும் படங்களில் காண்க. (படம் ரூபன்)

# குடாநாட்டில் படை நிலைகளைப் பலப்படுத்த சிறிலங்காப் படையினர் தீவிர நடவடிக்கை

## -மக்கள் மீதான கெடுபிடிகளும் உயர்வு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரின் பலப்படுத்தல் நடவடிக்கைகளும் பொது மக்கள் மீதான கெடுபிடி நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டிருப்பதனைத் தொடர்ந்து பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.**

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்கள் மற்றும் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் உட்பட பரவலாக இராணுவத்தினர் தமது நிலைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் கடற்றொழிலாளர்கள் மீதான பாஸ் கெடுபிடி, தடைமுகாம்களில் இடம்பெறும் சோதனைக் கெடுபிடிகள், இரவு நேரரோந்து நடவடிக்கைகளின் போது பொதுமக்களை மிரட்டுதல், மக்களிடம் விபரம் சேகரித்தல் எனப் பரவலாகப் படையினர் தமது கெடுபிடி நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இதைவிடப் படையினர் கடலிலும் தரையிலும் தமது சண்டைப்பயிற்சி நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். அத்துடன் பொது மக்கள் மத்தியில் யுத்த பீதியை ஏற்படுத்தும் வதந்திகளைப் பரப்பும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.படையினரின் இவ்வாறான நடவடிக்கைகள் மக்களின் இயல்பு வாழ்வைப் பெரிதும் பாதித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (33)

## நீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்திலுள்ள வேலணை, சரவணை, ஊர் காவற்றுறை உள்ளிட்ட தீவகத்தின் பல பகுதிகளிலும் குழாய் மூலமாக குடிநீர் வழங்க யாழ். அரசசெயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (33)

## கோதுமை மா,மண்ணெண்ணெய் கள்ளச்சந்தையில் தாராளம்

(நல்லூர்)

யாழ்.குடாநாட்டில் மா மற்றும் மண்ணெண்ணெய் போன்றவற்றிற்குத் தட்டுப்பாடு நிலவுகின்றபோதிலும் கள்ளச்சந்தையில் கூடிய விலையில் எவ்வளவு தொகையானவற்றையும் கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கின்றது. மண்ணெண்ணெயைப் பொறுத்தவரை எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இல்லை என்று வலிகாமம் பகுதியில் அறிவிப்பட்டைகள் தொங்கவிடப்பட்டுள்ளன. இதேநேரம் எரிபொருள் நிரப்பும் நிலையங்களிற்கு அண்மையாக உள்ள கடைகளில் லீற்றர் 35 ரூபாவிற்குமேற்பட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இதே போன்று மாவும் கூட 35 ரூபா முதல் பல விலைகளிலும் கள்ளச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பதுக்கலைக் கட்டுப்படுத்த யாழ் செயலகமோ, பிரதேச செயலகமோ, அன்றி கிராமஅலுவலகர்களோ நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையென பொது மக்கள் கண்டனம் தெரிவிக்கின்றார்கள். (41)

## சிறார்கள் கல்வியைத் தடையின்றித் தொடர எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அகற்ற முயற்சி

### -தமிழ் மாணவர் ஒன்றியம் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வாழும் சிறுவர்கள் தம் கல்வியைத் தடையின்றி தொடர்வதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து தமிழ் மாணவர் ஒன்றியம் ஆராய்ந்து வருகிறது.

சிறார்கள் கல்வியைத் தொடர்வதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிவதன் மூலம் அத்தடைகளையும் பிரச்சினைகளையும் நீக்கி சிறுவர்கள் வளமான கல்வியைத் தொடர்வதற்கு வழிவகை செய்வதே இதன் நோக்கமாகும்.

வறுமை மற்றும் குடும்பப் பின்னணி என்பவற்றின் காரணமாக தம் கல்வியை இடைநிறுத்தியுள்ள சிறார்களை மீள கல்வி நடவடிக்கைகளில் இணைப்பதை மையமாகக் கொண்டே தமிழ் மாணவர் ஒன்றியம் இது குறித்து நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்காக பாடசாலை மற்றும் கிராம மட்டங்களில் பல தரப்பினருடனும் அவர்கள் சந்தித்துக் கலந்தாலோசித்து வருகின்றனர். (33)



மிருசுவிலில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் லயன்ஸ் கழகம்-மற்றும் தொண்டுநிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் கலந்து கொண்டுள்ள மக்களைப் படத்தில் காணலாம். (படம்-ஆன்சலின்)

## வயோதிபப் பெண்ணை ஏமாற்றி சங்கிலி பறித்தவர் பிடிபட்டார்

### -மருதனார்மடத்தில் சம்பவம்

(நல்லூர்)

வயோதிபப் பெண்ணை ஏமாற்றி சங்கிலியுடன் தப்பிச் செல்ல முயன்றவர் கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

மருதனார்மடம் சந்தியிலுள்ள பேருந்து தரிப்பிடத்தில் வயோதிப மாதுவிடம் கதைகொடுத்தவர் அவர் நகை அடைவு வைத்த விடயத்தை அறிந்து அவருடன் கதைத்து ஒன்றரைப் பவுன் சங்கிலியை ஒருபவுன் சங்கிலியைத் தந்தால் தான் மீளப்பெற்றுத் தருவதாகக் கூறி வயோதிப மாதுவின் கழுத்தில் இருந்த சங்கிலியை வாங்கிக் கொண்டார்.

பேருந்து தரிப்பிடத்திற்கு பேருந்து ஒன்று வந்துதரித்து புறப்படும் போது சங்கிலியுடன் குறிப்பிட்ட நபர் ஓடிச்சென்று ஏறி தப்பிச்செல்ல முயன்றுள்ளார்.

உண்மை நிலையை உணர்ந்த வயோதிப மாது கூக்குரலிடவே அவ்வேளை உந்துருளியில் வந்த கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர்கள் பேருந்தைத் தொடர்ந்து சென்று உரியவரைப்பிடித்து சங்கிலியை மீட்டு வயோதிபமாதுவிடம் ஒப்படைத்துள்ளனர். (41)

## இயற்கை அனர்த்தத்தால் சேதமுற்ற வீடுகளைப் புனரமைக்க உதவுக!

### -யாழ். பொதுஅமைப்புக்கள் ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாகப் பெய்த அடைமழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குகள் என்பனவற்றால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைத்துக்கொடுக்க உடன்நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென யாழ். மாவட்டபொது அமைப்புக்களின் ஒன்றியம் யாழ். அரசஅதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த காலங்களில் குடாநாட்டில் பெய்த அடைமழை மற்றும் வெள்ளம் என்பன காரணமாக யாழ்.குடாநாட்டில் 1041 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் இவற்றின் பெறுமதி 2கோடியே 37 இலட்சத்து 430ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இவ்வாறு இழப்புக்களைச்சந்தித்த மக்களின் வீடுகளைப் புனரமைக்க உடனடி நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாததால் சேதமடைந்ததன் காரணமாக வீடுகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது வீடுகளில் குடியேற முடியாத நிலையில் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் பொது இடங்களிலும் தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.எனவே இந்நிலையைச் சுட்டிக் காட்டி யாழ்.பொது அமைப்பினரால் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

## மூதூர்-ஈச்சிலம்பற்று மக்களுக்கு கனேடிய தமிழர் உதவி

கனேடியதமிழ் வானொலியின் ஒருங்கிணைப்பின் கீழ் கனேடிய வாழ் தமிழ் மக்கள் மூதூர்-ஈச்சிலம்பற்றுப்பிரதேசத்தில் வெள்ளத்தினால் மோசமாகப்பாதிக்கப்பட்ட மக்களுக்குநிவாரணம் வழங்கவென 17இலட்சம் ரூபா நிதி உதவியைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கு வழங்கியிருக்கின்றார்கள்.இந்த நிதித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்டச் செயலகத்தினால் கடல்மார்க்கமாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை மூதூருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.திருமலை அஷ்ரப் இறங்குதுறையிலிருந்து மூதூருக்குக் கொண்டு செல்லப்பட்ட இப் பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக விநியோகிப்பதற்கான ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்டப் பணிப்பாளர் கிருபா தெரிவித் தார்.திருமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 60 தொண்டர்களும் நிவாரண விநியோகப்பணியில் ஈடுபடுபடுவதற்காக ஈச்சிலம்பற்றுப் பிரதேசத்திற்குச் சென்றுள்ளனர்.தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்டச் செயலகம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குக் கடந்த ஏழு தினங்களாக சமைத்த உணவை வழங்கிவருவதாக மாவட்டப்பணிப்பாளர் கிருபா தெரிவித்தார். யுனிசெப், யு.என்.எச்.சி.ஆர், ஐ.சி.ஆர்.சி ஆகிய அமைப்புக்கள் வழங்கிய நிவாரணப் பொருட்களும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கடல் மார்க்கமாக மூதூருக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (25)

## கால்நடைகள் மீது நடவடிக்கை

(தென்மராட்சி)

கொடிகாமம் திருநாவுக்கரசு பாடசாலையின் வகுப்பறைகளுள் ஆடு,மாடுகள் சென்று கூட்டமாய் இரவு வேளைகளில் தங்கிநிற்பதுடன் வகுப்பறைகள் அனைத்தையும் அசுத்தப்படுத்தி வருகின்றன. இது குறித்து சம்பந்தப்பட்ட கால்நடை வளர்ப்பவர்களுக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் கண்டும் காணாததும் போல் இருப்பதால் இது குறித்து நடவடிக்கை எடுக்க கொடிகாமம் மத்தி விவசாய சம்மேளனம் முடிவெடுத்துள்ளதாகவும், இனிமேல் பாடசாலைக்குள் இருந்து பிடிக்கப்படும் ஒவ்வொரு கால்நடைக்கும் ரூ 500 வீதம் அறவிட முடிவு செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (28)

## கடலுணவு பதனிடலை மேம்படுத்த ஜப்பான் உதவ உறுதி மொழி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் கடற்றொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கு 10 மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்குவதற்கான உறுதி மொழியை ஜப்பான் வழங்கியுள்ளது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புகள் மற்றும் அரச புறக்கணிப்புகள் என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.மீனவர்களினது தொழிற்றுறையை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தைக்கருத்தில் கொண்டு கடலுணவுகளைப் பதனிடும் நவீன தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதற்காக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாச சம்மேளனத்தினர் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்தே ஜப்பான் இந்நிதி உதவியை வழங்க முன்வந்துள்ளது. (33)

## இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் 28இல் குடாநாடு வருகை

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவரிலன்சட் எதிர்வரும் 28ஆம் திகதி யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்.குடாநாட்டு மக்களின் அரசியல் அபிலாசைகள் மற்றும் அபிவிருத்திகள் சம்பந்தமான விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக யாழ். வரும் இவர் யாழ்.மாவட்ட அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசுவார்.

இதன் போது அமெரிக்காவில் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கி தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென கோரும் மகஜர்கள் குடாநாட்டு அமைப்புக்களால் கையளிக்கப்படவுள்ளன. (33)

# இந்த குளோனிங் பூனையின் விலை 22 இலட்சம் ரூபா



அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் மாநிலத்தில் வாழ்ந்து வரும் ஒரு பெண், பூனைக்குட்டி ஒன்றை வளர்த்து வந்தார். திடீரென அந்தப் பூனைக்குட்டி இறந்துவிட்டது. பூனைக்குட்டி இறந்ததால் அந்தப் பெண்மணி பெரும் துக்கமடைந்தார் சாப்பாடு இல்லை தூக்கம் இல்லை ஒரே சோகத்தில் வாடினார். இதைப்பார்த்த குடும்பத்தினர் அந்தப் பூனையின் ரத்த அணுக்களை எடுத்துப் பத்திரப்படுத்தினர். இறந்த பூனைக்குட்டியைப் போல் மீண்டும் ஒரு பூனைக் குட்டியை உருவாக்கும்படி மருத்துவமனை ஒன்றை அணுகினர். மருத்துவமனையில் பூனையின் ரத்த அணுக்களைப் பயன்படுத்தி குளோனிங் மூலம் பூனைக்குட்டியை வெற்றிகரமாக உருவாக்கினர். அந்தப் பூனைக்குட்டியைத்தான் படத்தில் பார்க்கி றீர்கள் இந்த குளோனிங் பூனைக்குட்டியை அந்தப் பெண்மணிக்கு 22 லட்சம் ரூபாய்க்கு விற்றுள்ளனர்.

இறந்த பூனையின் பெயர் நிக்கி என்பதால் அந்த ரத்தத்தில் உருவான அதே பூனைக்கு வீட்டில் நிக்கி என்று பெயரிடப்பட்டுள்ளது. சோகத்தில் இருந்த பெண்மணி தற்போது மகிழ்ச்சியில் உள்ளார். இது தான் உலகின் முதல் குளோனிங் பூனைக்குட்டி.ʼ

# ஜப்பானின் ஹொண்டா நிறுவனத்தில் வரவேற்பாளராகப் பணிபுரியும் றோபோ




ஜப்பானிய ஹொண்டா நிறுவனம் வரவேற்புப் பணிகளில் ஈடுபடுத்தவென றோபோக்களை உருவாக்கியுள்ளது.

இந்த றோபோக்கள் சாதாரணமாக வெளியாரையும் தமது நிறுவன ஊழியர்களையும் இனம் காணும் திறனைக் கொண்டிருக்கிறது. இதற்கேற்றவாறு இந்த இயந்திர மனிதனில் புகைப்படக் கருவியொன்றும் கணினியொன்றும் பொருத்தப்பட்டுள்ளன. இந்த (றோபோ) இயந்திர மனிதன் தொலைபேசித் தொடர்புகளையும் மனித நேயத்துடன் மேற்கொள்ளும் தன்மையுடையது.

# உலகிலேயே எடை குறைவாகப் பிறந்த குழந்தை

சோடா நிரப்பப்பட்ட தகரடப்பாவைவிட எடை குறைவான குழந்தை ஒன்று பிறந்துள்ளது. இது தான் உலகிலேயே எடை குறைவான குழந்தை ஆகும் .

3 மாதங்களுக்கு முன்பு செப்ரெம்பர் 19-ஆம்திகதி இந்தக் குழந்தை பிறந்த போது, இதன் எடை 8.6 அவுன்ஸ் (243.80 கிராம்) ஐதராபாத்தைச் சேர்ந்த இந்தியப் பெற்றோருக்குப் பிறந்த குழந்தைக்கு ருமய்சா என்றுபெயர் சூட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் சிகாகோவில் உள்ள லயோலா பல்கலைக்கழக மருத்துவ மையத்தில் ஆபரேஷன் செய்து குழந்தை எடுக்கப்பட்டது. இதற்கு முன்பு பிறந்த எடைகுறைவான குழந்தையைவிட இது 36.85 கிராம்குறைவானது ஆகும். ருமய்சா அடுத்த மாதம் (சனவரி) முதல் வாரத்தில் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்புகிறது. ருமஸ்சாவுடன் இன்னொரு குழந்தையும் இரட்டையாகப் பிறந்தது. அந்தக் குழந்தைக்கு ஷிபா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அது பிறந்தபோது அதன் எடை 567கிராம் இருந்தது. தாய்க்கு உயர் ரத்த அழுத்தம் இருந்ததால் 26 வாரகர்ப்பத்திலேயே குழந்தைகள் வெளியே எடுக்கப்பட்டன.

# "டெல்டா-4" ரொக்கெட்

" கொலம்பியா ரொக்கெட் விபத்துக்குப்பிறகு அமெரிக்காவின் "நாசா" விண்வெளி நிறுவனம் "டெல்டா~4" என்ற புதியரொக்கெட்டை தயாரித்துள்ளது.



நவீன வசதிகளுடன் உயர் தொழில் நுட்பத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த போயிங் டெல்டா~4 ரொக்கெட் அதிக எடையையும், செயற்கை கோள்களையும் இது சுமந்து செல்லும் புளோரிடாவில் உள்ள கெப் கலைரால் விமானப்படை தளத்தில் இருந்து சோதனை முறையில் முறைப்படி இந்த ரொக்கெட் செலுத்தப்பட்டது.

# விவசாயிகளுக்கு உதவும் கணினி

அமெரிக்காவின் ஓசியோ மாகாணத்தில் உள்ள கெண்டன் பண்ணையின் உரிமையாளர் பிரியான் வர்க்கின் என்பவர் புதிய கணினி ஒன்றை பயன்படுத்தி வருகின்றார். சிகரெட் பாக்கெட் அளவிலேயே இருக்கும் இந்த பொக்கெட் கணினி பயிர் செய்யும் நிலங்கள் மீது எடுத்துச் சென்றால்.

பயிரின் நிலை, எந் தெந்த இடங்களில் உரம் குறைவாக இருக்கிறது, மண் வளத்தின தன்மை, எந் தெந்த பகுதிகளில் விளைச்சல் குறைவாக இருக்கும் என்பதை அதன் திரையில் உள்ள வரை படத்தில் தெளிவாகக் காட்டிவிடும்.



தனது பண்ணை நிலத்தில் அந்த கணினியை விவசாயி வாட்கின் இயக்கும் காட்சி.

# சீதோஷண நிலைக்கேற்ப செயற்படும் புதிய வாகனம்

## ஜப்பானிய நிறுவனம் தயாரித்தது.

படத்தில் காணப்படும் வாகனம் கடும் பனி காலங்களில் குளிரடிக்கும் போது பிரயாணம் மேற்கொள்ளவென தயாரிக்கப்பட்டுள்ள ஒன்றாகும் முழுதும் இலத்திரனியல் தொழில்நுட்பத்தால் ஆன இவ்வாகனத்தில் ஒருவர்மட்டுமே பிரயாணம் செய் யலாம் ஜாப் பான் நிறுவனம் ஒன்று இதனை தயாரித்துள்ளது. இது குளிர் காலத்தில் மட்டுமல்ல அனைத்து கால நிலை மாற்றங்களுக் கேற்ப தன்னியக்க முறையில் செயற்படும்திறன் கொண்டது.

வெப்பமேற்றிகளும் குளிரூட்டிகளும்இதில் பொருத் தப்பட்டுள்ளன. சீதோஷண நிலைக் கேற்பவெப்பமேற்றியோ,குளிரூட்டியோ தாமாக செயற்படத்தக்க வகையில் இந்த வாகனத் தை வடிவமைத்துள்ளனர்.



# யானைத் தந்தத்தில் அபூர்வ புல்லாங்குழல்

ஜேர்மனியின் சுவாபியான் மலைப் பகுதியில் பல்கலைக்கழக அகழ்வாராய்ச்சித்துறை நிபுணர்கள் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர். அப்போது அங்குள்ள மலை அடிவாரத்தில் புதைந்து கிடந்த அபூர்வ புல்லாங்குழலை அவர்கள் தோண்டி எடுத்தனர். இந்தப் புல்லாங்குழல் 35 ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பு உருவாக்கப்பட்டது என்பதும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.அது மட்டுமல்ல இந்தப் புல்லாங்குழல் காட்டு யானையின் தந்தத்தால் உருவாக்கப்பட்டது. சேதம் அடையாமல் அப்படியே இருக்கும் அந்த யானைத் தந்த புல்லாங்குழலை ஸ்டட்கார்ட் அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைத்திருக்கிறார்கள்.

# வாகனத்தில் கோளாறை கண்டுபிடிக்கும் கருவி




உங்கள் வாகனம் பிரயாணம் மேற் கொள்ளும்வேளையில் திடீரென கோளாறுக் குட்பட்டால் அது என்ன வகையானது என இனம் காணக் கூடிய கருவியையே படத்தில் காண்கின்றீர்கள் சிறு கணினி வடிவிலான இக்கருவி வாகனங்களில்உள்ளடஸ் போட்டுக்கு அருகில் பொருத்தப்பட்டு உபயோகப் படுத்தலாம். வேலைப்பளு அதிகரித்துள்ள இக்காலத்தில் இதன்உதவிமிகஅவசிய மாகும்.

# பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனங்களை கட்டுப்படுத்தாவிடின் நிதி உதவி கிடைக்காது

## – உலக வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

வேலையற்ற 20,000 பட்ட தாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதைக் கட்டுப்படுத்த வேண்டுமென உலக வங்கி கூறியுள்ளது.

இதை அரசாங்கம் கவனத்திற்கு எடுக்காமல் ஆசிரியர் நியமனங்களை வழங்குகின்றபடியால் எதிர்வரும் காலங்களில் உலக வங்கி ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு அறிவுரைகள் வழங்கப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளது.

ஆசிரியர் நியமனங்களைக் குறைக்கா விட்டால் இலங்கையின் கல்வித் திட்டங்களுக்கு உலக வங்கி உதவி செய்யாதென்றும், கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு இம்மாதம் 22ஆம் திகதி கடித மூலம் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பாடசாலைப் பரீட்சை முறைகளில் மாற்றம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரம் மற்றும் சாதாரணதரப் பரீட்சைகள், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஆகிய மூன்றையும் மறுசீரமைக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அரசாங்கப் பாடசாலைகளில் முக்கியமாக இந்த மூன்று பரீட்சைகள் தொடர்பான மறுசீரமைப்புத்திட்டமும், உரிய பரீட்சை முறையும் அடுத்த வருடம் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. மாணவர்களின் சிந்தனைத் திறன் மற்றும் பரீட்சைகளின் தரம் ஆகியவற்றையும் மேம்படுத்துவதற்காகத் தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவகம், பல்கலைக்கழக கல்விமான்கள் மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் உதவியுடன் கல்வியமைச்சு இந்தத் திட்டத்தை அறிமுகப்பட்டுத்தவுள்ளது.

# மாணவர்களின் வகுப்பு நேரசூசிகைகளில் திருத்தம் செய்யப்படவுள்ளதாக அறிவிப்பு

(கொழும்பு)

முதலாம் ஆண்டு தொடக்கம் 13 ஆம் ஆண்டு வரை கல்விபயிலும் மாணவர்களின் வகுப்பு நேரசூசிகைகளில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் உள்ள நேர அட்டவணைகளின் படி எட்டு பாடவேளைகள் ஒரு நாளைக்கு படிப்பிக்க வேண்டும், அதன்படி கிழமைகளில் ஐந்து நாட்களுக்கு 40 பாடவேளைகள் நடத்தப்படல் வேண்டும். இதனால் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ஓய்வு கிடையாது. படிப்பிற்கே அவர்களின் நேரங்களைச் செலவிட வேண்டியுள்ளதென தேசிய கல்விப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஜகத்விக்கிரமசிங்க கூறியுள்ளார். ஆகவே கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பாதகம் ஏற்படா வண்ணம் நேர சூசிகளை தயாரிப்பதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென ஜகத்விக்கிரமசிங்க மீண்டும் கூறியுள்ளார்.

# சிறந்த தயார்ப்படுத்தல்களுடன் இராணுவம் எத்தருணத்தையும் எதிர்கொள்ளத் தயார்

## சிறீ. இராணுவத் தளபதி அறிவிப்பு

**சிறந்த தயார் படுத்தல்களுடன் எந்தத் தருணத்தையும் எதிர்கொள்ள சிறிலங்கா இராணுவம் தயார் நிலையில் உள்ளது என்று இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட சூளுரைத்துள்ளார்.**

தியத்தலாவை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற புதிய உத்தியோகத்தர்களை இராணுவத்துக்கு உள்வாங்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் பேசுகையில், "சண்டைக்காலமோ சமாதான காலமோ நாட்டுக்கு ஏற்படக் கூடிய எந்த அச்சுறுத்தலையும் சமாளிக்கும் வகையில் சிறிலங்கா இராணுவம் எந்நேரமும் சிறந்த தயார் நிலையில் இருக்க வேண்டும். இந்தத் தேவையை நிறைவேற்றுவதற்காக இராணுவத்தினருக்கு சிறந்த பயிற்சி அளிக்கப்பட வேண்டும். படைகள் உஷார் நிலையில் பேணப்பட வேண்டும். தமக்குக்கீழ் பயிற்சி பெறுபவர்களுக்கு சிறந்த பயிற்சியையும் தலைமைத்துவ நன்னெறியையும் போதிக்கவேண்டிய பொறுப்பு இராணுவக்கட்டளை அதிகாரிகளுக்கு உள்ளது.-" என்று கூறினார்.

# மருத்துவ ஆய்வு கூட உதவியாளர்களுக்கு சனவரிமுதல் சேவை மாற்றுத்திட்டம்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

சுகாதார சேவையில் பதவியில் உள்ள மருத்துவ ஆய்வுகூட உதவியாளர்களுக்கு சேவை மாற்றுத் திட்டம் எதிர்வரும் சனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. இதனை நடைமுறைப்படுத்த தாம் முனைப்புடன் இருப்பதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த முறை செயற்படுத்தப்படுமானால் அது தமது தொழிலைப் பாரிய அளவில் பாதிக்கும் என சுகாதார சேவை ஊழியர்களின் சங்க ஏற்பாட்டாளர் ரவி குமுதேஸ் தெரிவித்தார். இந்த முறையானது தமது தொழிலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என ஏற்கனவே சுகாதார அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர் இன்று விடுத்துள்ள செய்தி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. எனவே இதனை எதிர்த்து பணிப்புறக்கணிப்புக்குத் தயாராக வேண்டியுள்ளது எனத்தெரிவித்தார்.

# கடமைநேர முறைகேடுகளை கட்டுப்படுத்த கைவிரல் அடையாளம்

## சிறிலங்கா அரசு நடவடிக்கை

அரசாங்க ஊழியர்கள் தமது கடமை நேரத்தில் மேற்கொள்கின்ற முறைகேடுகளைக் கட்டுப்படுத்தவென விரல் அடையாள கையொப்பமுறையை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டம் சனவரி மாதம் மோட்டார் போக்குவரத்துத திணைக்களத்தில் அறிமுகப்படுத்தப்படவிருக்கின்றது. அதனைத் தொடர்ந்து சனவரி மாத முடிவுக்குள் ஏனைய அரசாங்கத் திணைக்களங்களுக்கும் இம்முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. இதற்கென ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா (175000) பெறுமதியான அதிநவீன இயந்திரமும் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகத் திணைக்கள ஆணையாளரொருவர் கூறினார்.

அரசாங்க ஊழியர் தமது கடமை நேரத்தில் மேற்கொள்கின்ற முறைகேடுகள் தொடர்பாக அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியதன் விளைவாகவே இம்முறை அமுலுக்குக் கொண்டுவரப்படு கின்றது.

அரசாங்க ஊழியர்களில் அநேகர் தற்போதைய முறையைப் பயன்படுத்தி உரிய நேரத்திற்குக் கடமைக்கு வருவதுமில்லை. தமக்குரிய கடமை நேரத்தில் முழுமையாகப் பணியாற்றுவதுமில்லை, இப்படியானவர்களின் கையொப்பங்களைச் சக ஊழியர்கள் வைப்பதுடன் அவர்களே அட்டைகளையும் பதிவு செய்கின்றனர்.

இதனால் அரசாங்கத் திணைக்களங்களின் வேலைகள் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டே அரசாங்கம் இப்புதிய முறைமையை அறிமுகப்படுத்த முடிவு செய்தது. இத்திட்டத்தின் மூலம்அரசாங்க ஊழியர்களின் கடமைநேர முறைகேடுகளை கட்டுப்படுத்தி அரசாங்க சேவையை மேம் படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

# ஐ.தேசியக்கட்சியால் கட்டாக்காலி நாய்கள் துன்புறுத்தப்பட்டதற்கு நடவடிக்கை எடுக்குக!

## - விலங்குகள் நட்புறவுச்சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

ஐ.தே.கட்சி கொழும்பு ஹைபாக்கில் நடத்திய கூட்டத்தில் கட்டாக்காலி நாய்கள் துன்புறுத்தப்பட்டமை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக அவர்களது அந்தஸ்தையும் பொருட்படுத்தாது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு விலங்குகள் நட்புறவுச் சங்கம் மேல் மாகாண முதலமைச்சருக்கும், பொலிசாருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உயர்நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக இரண்டாண்டு கடுழியச் சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்ற முன்னாள் பாராளுமன்ற அங்கத்தவர் எஸ்.பி. திஸாநாயக்கவை விடுதலை செய்யுமாறு கோரி நடத்தப்பட்ட போராட்டத்திலேயே ஐ.தே.கட்சி இவ்வாறு கட்டாக்காலி நாய்களைத் துன்புறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஐ.தே.கட்சியினர் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய கூட்டத்திற்கு கட்டாக்காலி நாய்களைக் கொண்டு செல்வதற்கு கொழும்பு மாநகர பிரதி முதல்வரும், மாநகர சபையின் பிரதம கால்நடை மருத்துவரும், நேரடியாக உதவியதாக அச்சங்கம் அதன் அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை இதற்கு மாநகரசபையின் விசர் நாய்க்கடி நோய் ஒழிப்புப் பிரிவின் வளங்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதெனவும் குற்றம் சாட்டியுள்ளது. கட்டாக்காலி நாய்களைப் பயன்படுத்துவதன் மூலம் அரசியல் ஆதரவாளர்களின் மனோபலத்தைக் கட்டியெழுப்ப முடியுமா? எனவும் வினா எழுப்பியுள்ளது.

# நோர்வேத் தூதரகம் மீண்டும் திறப்பு

கடந்த வியாழக்கிழமை மூடப்பட்ட இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் கடந்த புதன்கிழமை முதல் தமது வழமை யான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. அந்திரெக்ஸ் எச்சரிக்கையை அடுத்து நோர்வே தூதரகம் மூடப்பட்டது எனினும் அந்த அந்திரெக்ஸ் அச்சம் அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்தால் நீக்கப்பட்டதை அடுத்தே தூதரகம் திறக்கப்பட்டது.

# சம்பள நிலுவையை டிச. 31 இற்குள் வழங்க பிரதம கணக்காளர் பணிப்பு

வடகிழக்கு மாகாணப்பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள். ஆசிரியர்களுக்கு வழங்கப்படாது இருக்கும் சம்பள நிலுவைகள் அனைத்தையும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களையும் மாகாண பிரதமகணக்காளர் ஆர். புவிராஜ் கேட்டுள்ளார்.

இவ்வாசிரியர் அதிபர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவைகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் போது சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும், மரணமடைந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகளை வழங்குவதற்காக 237 மில்லியன் ரூபா தேவையென திறைசேரியிடம் வடக்குக்கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் கோரியிருந்தது . இதில் பெரும்பகுதிப் பணம் திறைசேரியால் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு சக்திகளின் செல்வாக்கை இல.இல் இல்லாதொழிக்க வேண்டும்

## ஜே.வி.பி பிரச்சாரச் செயலர்

(கொழும்பு)

வெளிநாட்டு சக்திகள் இன்று இலங்கையின் கட்சி அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் அளவுக்கு வந்துள்ளதாக தேசப்பற்றாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச இதற்கு நாட்டில் கடந்த தசாப்தங்களில் இடம் பெற்ற வெளிநாடுகளின் ஆதிக்கமே காரணமாகும். எனவே இதனைத் தடுக்க வேண்டியது அவசியமானதாகும்.

கடந்த காலத்தில் சில அரசியல் கட்சிகளும், குழுக்களும் இந்நாட்டை மீண்டும் ஒரு குடியேற்ற நாடாக மாற்றுவதற்கு முயற்சி செய்தன. என ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

குடியேற்றவாத சிந்தனையில் இருந்து விடுபட்டு, இலங்கையின் தேசிய உரிமைத்துவங்கள் பற்றிக் கவனம் செலுத்த வேண்டிய காலம் வந்து விட்டது. அண்மைய வரலாற்றைப் பார்த்தால் எமது நாடு எந்தளவிற்கு அடிமைப்பட்டு இருந்தது என்பதை அறியலாம்.

அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள் தொடர்பாகவும், கேள்வி எழுப்பும் நிலையில் வெளிநாட்டுச் சக்திகள் இருக்கின்றன. பொருளாதாரத் துறையிலும் அவர்களின் தலையீடு இருந்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தான் "அடிமைப்படாத நாடு" என்ற தொனிப்பொருளில் எமது வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உத்தேசித்துள்ளோம் என மேலும் தெரிவித்துள்ளார்.

# தற்போது இயங்கும் 3 பிரிவுகளுக்கு மேலாக தமிழ்மொழிக் கல்விப் பிரிவு வேண்டும்

## –தமிழர். ஆ. சங்கம் கோரிக்கை

(திருகோணமலை)

மத்திய கல்வி அமைச்சில் தற்போது செயற்படும் தமிழ்மொழிப் பிரிவு, முஸ்லிம் பாடப்பிரிவு மற்றும் தோட்டப்பாடசாலைப்பிரிவு ஆகிய மூன்றையும் இணைத்து தனித் தமிழ் மொழித்திணைக்களம் ஒன்றை உருவாக்கும் கல்வி அமைச்சின் உத்தேசத்திட்டத்துக்கு இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழு ஒன்று சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் தலைமையில் அண்மையில் கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டிமெல்லை சந்தித்துப் பேச்சு நடத்தியபோது மத்திய கல்வி அமைச்சில் தமிழ்மொழிக் கல்விக்கு என்று தனிப்பிரிவு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தது. அக் கோரிக்கையை தாரா டிமெல் ஏற்றுக்கொண்டு சிலவாரங்களில் தமிழ்மொழிக்கல்விக்கென தனிப் பிரிவு அமைக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார். இப்போது கல்வி அமைச்சின் முகாமைத்துவ அதிகாரிகள் அமைச்சின் கீழ் தற்போது தனித்தனியாகச் செயற்பட்டுவரும் தமிழ்மொழிப் பிரிவு, முஸ்லிம் பாடசாலைகள் பிரிவு, தோட்டப்பாடசாலைகள் பிரிவு ஆகியவற்றை இணைத்து தமிழ் மொழிக்கல்விப்பிரிவு என ஒன்றை உருவாக்கும் திட்டத்தைத் தயாரித்துள்ளனர். இதற்கே இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் கடந்த புதன்கிழமை மத்தியகல்வி அமைச்சின் நிர்வாக முகாமைத்துவ அதிகாரி கே.எல்.எல். விஜயரத்னாவைச் சந்தித்து எதிர்ப்புக் கடிதத்தைக் கையளித்தார். தற்போது இயங்கிவரும் மூன்று பிரிவுகளுக்கும் மேலாகவே தமிழ்மொழிக் கல்விப் பிரிவுப் பிரதிக்கல்வி பணிப்பாளர் நாயகம் ஒருவரின் தலைமையில் இயங்கக் கூடியதாக உருவாக்கப்படவேண்டும் என்று மகாசிவம் சந்திப்பின் போது அமைச்சின் நிர்வாக முகாமைத்துவப் பணிப்பாளரிடம் கேட்டுக் கொண்டார். (25)


## தமிழ்ப் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

01 கல்வித்தகைமை:-க.பொ.த உயர்தரத்தில் தமிழ்ப் பாடத்தில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.
அகவை:-18 தொடக்கம் 23வரை

**குறிப்பு:**

**01.வேண்டுகை முடிவு நாள்-31.12.2004**

**02.நேர்காணல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்**

**03.நேர்காணல் நடைபெறும் இடம்:-**

**மனிதவள மேம்பாட்டுப்பகுதி,**
**நிதித்துறை,**
**நாகதம்பிரான் வீதி,**
**கிளிநொச்சி.**

04.நேர்காணலுக்கு வரும்பொழுது கல்வித்தகைமைச் சான்றிதழ் (க.பொ.த.சா/த, க.பொ.த உ/த), பிறப்புச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றையும் அவற்றின் நிழற்படிகளையும் கொண்டு வருக.

05.பயிற்சிக் காலத்தில் மாதந்தோறும் உரூபா 5,000.00 உதவு தொகையாக வழங்கப்படும். தங்குமிட வசதி உண்டு.

06.வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

07.பயிற்சிக்காலம்: ஓர்ஆண்டு

08.பயிற்சியின் பின் ஐந்தாண்டுகள் நிதித்துறையிற் பணியாற்றுதல் வேண்டும்.

09.பயிற்சியின் நிறைவில் தகைமைச்சான்றிதழ் வழங்கப்படும். பொருத்தமான பணி வழங்கப்பட்டு நிதித்துறைச் சம்பளத் திட்டத்திற்கமைவாகச் சம்பளம் வழங்கப்படும்.

10.தமிழ்மொழியிற் பற்றுடையவராகவும், ஆற்றலுடையவராகவும், தொடர்ந்து கற்கும் விருப்பமுடையவராகவும் அடையாளம் காணப்படுவோர் தமிழிற் சிறப்புக்கல்வியை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**ஆளுகை,**
**மனிதவள மேம்பாட்டுப்பகுதி,**
**நிதித்துறை.**

(சி.10990)


## கலந்துரையாடல்

கிளி. மாவட்ட பல்கலைக்கழக புகுமுக மாணவருக்கான அவசர கலந்துரையாடல் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தில் நடைபெற இருப்பதனால் அனைத்துப் புகுமுக மாணவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளி.மாவட்ட பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத் தலைவர் கேட்டுக் கொள்கின்றார்.

## அழைப்பு

(நமது நருபர்)

பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப் பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள்,ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்கள் ஆகியோரை வரும் 27ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமுகம் தருமாறு கிளிநொச்சி மாவட்ட வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் கேட்டுள்ளார்.

## இரு அமைச்சர்கள் மட்டு.விஜயம்

அமைச்சர்கள் அநுரகு மாரதிஸாநாயக்க, விஜிதஹேரத் ஆகியோர் மட்டக்களப்பிற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்துள்ளனர்.

மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் சண்முகம் தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக்கூட்டத்தில் இவர்கள் இருவரும் கலந்து கொண்டுள்ளனர். அத்துடன் அங்கு பல்வேறு விடயங்கள் ஆராயப் பட்டுள்ளன.

### - பாராளுமன்ற உறுப்பினரின் தலையீட்டால்-

## சிதம்பரபுரம் நலன்புரி நிலைய மக்களின் நிவாரண ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது

சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் வாழும் மக்கள் தமக்குரிய மூன்று மாத கால நிவாரணப் பொருட்களை வழங்குமாறு கோரி மூன்று நாட்களாக மேற்கொண்டு வந்த ஆர்ப்பாட்டம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் அவர்களின் தலையீட்டால் கடந்த புதன்கிழமை கைவிடப்பட்டது.

சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் உள்ள மக்கள் தமக்குரிய ஒக்ரோபர், நவம்பர்,டிசம்பர் மாதங்களுக்குரிய நிவாரணப் பொருட்களை வழங்குமாறு கோரி கடந்த திங்கட்கிழமை முதல் நலன்புரி நிலைய அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இவர்களின் நிலைமை தொடர்பாக ஆராய்வதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை அங்கு சென்ற வவுனியா அரச செயலக புனர்வாழ்வுக்கிளைப் பணிப்பாளர் மக்களுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற் கொண்டு பேசியதால் அவரின் வாகனத்தை தடுத்து நிறுத்தி மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் எனினும் பொலிசாரின் தலையீட்டால் அவரின் வாகனம் மீட்கப்பட்டு தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டது.

அடுத்தநாளான புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மக்களை வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் சந்தித்து நிலைமை தொடர்பாக கலந்துரையாடி முதற்கட்டமாக ஒக்ரோபர் மாதத்திற்குரிய நிவாரணம் வழங்கப்படும் எனவும் ஒருவார காலத்தினுள் நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான நிவாரணப் பொருட்கள் வழங்கப்படும் எனவும் உறுதியளித்ததை அடுத்து மக்களின் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் உடனடியாக புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர் ஜனாப் றாஸிக் அவர்களுடன் தொடர்பு கொண்டு நிவாரணப் பொருட்களை உடனடியாக வழங்குமாறு கோரினார். அக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மேலதிக செயலாளர் ஒரு வார காலத்தினுள் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைப்பதாக தெரிவித்துள்ளார். (10)


### தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

வ.இல.:- 83/04,
தன்மை:- நானாவிதம்,
பெறுமதி:- 50000/=

வழக்காளி.
மகேஸ்வரன் பரமேஸ்வரி,
அவரின் தத்துவகாரர்,
மகேஸ்வரன் ஆனந்த நடராசன்,
55,பாரதிபுரம், கிளிநொச்சி.
எதிர்
1) இராமசாமி சிறிகந்தராசா,
2) திருமதி, சிறிகந்தராசா,
சுவர்ணாஸ் அழகுமாடம்,
முல்லைவீதி, புதுக்குடியிருப்பு.
எதிராளிகள்

**பகிரங்க அறிவித்தல்**

**குறித்த 1ஆம் எதிராளிக்கு:-**

மேற்குறித்த வழங்கினை, வழக்காளி இந்நீதிமன்றில் உமக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ளார். உமக்கு அழைப்புக் கட்டளையைமுறை நிறைவேற்றுனர் மூலம் சேர்ப்பிக்க முயன்ற பொழுது, நீர் அம் முகவரியில் இல்லாமையால்,உமக்குரிய அழைப்பு கட்டளையைச் சேர்ப்பிக்க முடியவில்லை, எனவே நீரோ அல்லது உமக்கு நலனில் அக்கறை உடையவர்களோ, இப்பகிரங்க அறிவித்தல் வெளியாகிய அன்றிலிருந்து,15 நாட்களுக்குள் ஏதும் சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்காது விடும் இடத்து, இவ் அறிவித்தலை நீர் ஏற்றதாகவே கொள்ளப்படுவீர் என்றும், உமக்கு எதிராக ஒரு முகவிளக்கம் மேற்கொள்ளப்பட்டு, தொடர் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இதனால், உமக்கு அறியத்தரப்படுகின்றது.

**இந்து 2004ஆம் ஆண்டு 9.ஆம் மாதம் 24ஆம் திகதி "மன்றீன் கட்டளைப்படி"**
வரைபு....

*வழக்காளி சட்டவாளர்,*
*கா. இ. குலசங்கர்,*
*டிப்போச்சந்தி, இரத்தினபுரம் வீதி,*
*கிளிநொச்சி.* (5428)

*பதிவாளர்,*
*தமிழீழ மாவட்ட நீதிமன்று*
*கிளிநொச்சி.*



திருமண வாழ்வின் இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்திசெய்து
வெள்ளி விழாக் காணும் எமது பாசம் மிகு பெற்றோர்களுக்கு



## எமது வாழ்த்துக்கள்

மரியராசா பிலசிதம்மா தவரஞ்சிதம் தம்பதியினர்

அன்று 1979-12.25

இன்று 2004-12.25

எமைத்தாலாட்டி சீராட்டி இந்த உலகில் வாழ வழிகாட்டி
இருபத்தைந்து ஆண்டுகள் இணைந்து காலத்தைக் கடந்துவரும்
கண்காணும் தெய்வங்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்

பிள்ளைகள்,
கொடிகாமம்.

(சி.11050)

# ஜெயேந்திரரின் விளக்கமறியல் நீடிப்பு சனவரி 6-இல் பிணைமனு விசாரணை

(சென்னை)

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில் அதிகாரி சங்கரராமன் கொலை வழக்கில் காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவர் சார்பில் சென்னை உயர் நீதிமன்றில் இருமுறை பிணை கேட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டன. அந்தப் பிணை மனுக்கள் தள்ளுபடிசெய்யப்பட்டன. அதனை அடுத்து சுப்ரீம் கோட்டில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு சனவரி 6 ஆம் திகதி விசாரணைக்கு வர இருக்கிறது. இதனால் ஜெயேந்திரர் வேலூர் சிறையிலேயே காவலில் இருந்துவருகிறார்.

இந்த நிலையில் ஜெயேந்திரரின் நீதிமன்ற காவல் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தது. ஏற்கனவே வீடியோ கான்பரன்சிங் மூலம் கடந்தமுறை அவரது காவல் நீடிக்கப்பட்டது.

சங்கரராமன் கொலை வழக்கு காஞ்சிபுரம் முதலாவது ஜுடிசியல் மாஜிஸ்திரேட்டு நீதிமன்றில் நடந்து வருகிறது. அந்தக் நீதிமன்றில் தற்போது வீடியோ கான்பரன்சிங் வசதியில்லை. எனவே காஞ்சிபுரம் முதலாவது ஜுடிசியல் மாஜிஸ்திரேட்டு ஜி.உத்தமராஜ் நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணிக்கு செங்கல்பட்டு செசன்சு நீதிமன்றிற்குச் சென்றார். அங்கிருந்து அவர் வீடியோ கான்பரன்சிங் மூலம் வேலூர் சிறையில் இருக்கும் ஜெயேந்திரருடன் பேசினார்.

அப்போது அவர்களிடையே நடந்த விவாதம் வருமாறு:-

மாஜிஸ்திரேட்டு உத்தமராஜ்:- நான்தான் மாஜிஸ்திரேட்டு உத்தமராஜ். என்னை உங்களுக்குத் தெரிகிறதா?

ஜெயேந்திரர்:- நன்றாகத் தெரிகிறது.

மாஜிஸ்திரேட்டு:- உங்கள் உடல் நிலை எப்படியிருக்கிறது?

ஜெயேந்திரர்:- நன்றாக உள்ளது.

மாஜிஸ்திரேட்டு:- மருத்துவ வசதி செய்து கொடுக்கிறார்களா?

ஜெயேந்திரர்:- ஆம் செய்து தருகிறார்கள்.

மாஜிஸ்திரேட்டு:- உணவு சரிவர வழங்கப்படுகிறதா?

ஜெயேந்திரர்:-உணவுகொடுக்கிறார்கள்.

அதன் பிறகு மாஜிஸ்திரேட்டு "உங்கள் நீதிமன்ற காவல் 6-1-05 வரை நீடிக்கப்படுகிறது என்று உத்தரவிட்டார். வீடியோ கான்பரன்சிங் மூலம்காவல் உத்தரவைப் பிறப்பித்துவிட்டு மாஜிஸ்திரேட்டு ஜி. உத்தமராஜ் 3 மணிக்கு வெளியே வந்தார்.

நீதிமன்ற வளாகத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

# இருதய நோயைக் காரணம் காட்டியும் அப்புவுக்கு பொலிஸ்காவல் நீதிமன்றால் உத்தரவு

(சென்னை)

சங்கரராமன் கொலை வழக்கில் கடந்த 19 ஆம் திகதி அப்புவை ஆந்திர மாநிலம் கிருஷ்ணாபுரத்தில் தனிப்படை பொலிசார் கைது செய்தனர். பின்னர் காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட அப்புவை 3 நாட்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க நீதிபதி உத்தமராஜ் உத்தரவிட்டார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை அப்புவின் பொலிஸ் காவல் முடிவடைந்தது. அப்புவை டி.எஸ்.பி.ராஜமாணிக்கம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினார். பொலிசார் அப்புவை விசாரிக்க மேலும் 8 நாள் அனுமதி வழங்குமாறு கேட்டனர். இதனை ஏற்று நீதிபதி உத்தமராஜ் அப்புவின் பொலிஸ் காவலை மேலும் 6 நாட்கள் நீடித்து உத்தரவிட்டார்.

கடந்த 20ஆம் திகதி அப்புவை நீதிமன்றில் ஆஜர் படுத்திய போது அவரது வக்கீல்கள் சீதாராமன் மற்றும் புருஷோத்தமன் ஆகியோர் நீதிபதியிடம் ஒரு மனுவைக் கொடுத்தனர். அதில், 'அப்புவிற்கு இருதய நோய் இருப்பதால் முறையான சிகிச்சை அளிக்க வேண்டும் அவருக்கு பொலிஸ் காவல் அனுமதிக்கக் கூடாது,' எனக் குறிப்பிட்டிருந்தனர். பொலிஸ் காவலில் இருக்கும் போது முறையான சிகிச்சை அளிக்கப்படும் என விசாரணை அதிகாரி சக்திவேல் நீதிபதியிடம் உறுதியளித்தார். பொலிஸ் காவலில் இருக்கும் அப்புவிடம் தினமும் பொலிசார் 18 மணி நேரம் விசாரணை நடத்துகிறார்கள், டாக்டர் குழுவினர் சோதனை செய்து மருந்து மாத்திரைகள் வழங்கியுள்ளனர்.



# 1 ஆம் ஆண்டு நினைவுநாள்

அமரர்.திருமதி சுமதி. சத்தியவரதன்
(முகாமைத்துவ உத்தியோகத்தர்)
சென்திரேசா மகளிர் கல்லூரி,
கிளிநொச்சி

முகவரி
இல.501. 5 ஆம் யுனிற்
மல்லாவி,
யோகபுரம்

தோற்றம் 20.11.1970 மறைவு 25.12.2003

தகவல்:-
கணவன்,
மகள்

(5443)

# அறிவித்தல்


கிளிநொச்சி மாவட்டத்தில் சகல வசதிகளுடனும் கூடிய 3 மாடிகளைக்கொண்ட 50 மில்லியன் செலவில் மாவட்ட பொது நூலகத்தினை அமைக்கும் முகமாக வரைபடம் ஒன்றை சமர்ப்பிப்பதற்கான தகுதியான , அங்கீகரிக்கப்பட்ட கட்டடக் கலைஞர்கள் எமது சபையுடன் தங்கள் சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

பொன் நித்தியானந்தம்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி.10992)




## குத்துச்சண்டை களத்தில் சின்னப் பையனை நிறுத்துவது போன்றதே பங்களாதேசின் டெஸ்ட் பிரவேசம் வசிம் அக்ரம்



கிரிக்கெட் அரங்கில் அடங்கிக் கிடந்த விவாதம் ஒன்று மீண்டும் வெடித்துக் கிளம்புகிறது. வங்கதேச அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து தேவையா என்பது தான் அந்த விவாதம். இந்தக் குட்டி நாட்டில் கிரிக்கெட்டை வளர்ப்பதற்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? என்னைக் கேட்டால் வங்கதேசத்துக்கு மிகப் பெரிய அநீதி இழைக்கப்படுகிறது என்றுதான் சொல்லுவேன் எனத் தெரிவித்துள்ளார் பாகிஸ்தானின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் வசீம் அக்ரம்.

காரணம் எந்தவித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்காமல், திடீரென டெஸ்ட் அந்தஸ்து அந்த அணிக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. பெரிய பெரிய ஜாம்பவான்கள் மோதும் குத்துச்சண்டைக் களத்தில் சின்னப்பையனை இறக்கி விட்டது போல மாட்டிக் கொண்டு முழிக்கிறது அந்த அணி. பந்து வீச்சாளர்களின் கை எந்த அளவுக்கு வளைகிறது என்பதில் காட்டும் அக்கறையை வங்கதேசத்தில் கிரிக்கெட் வளர்ச்சிக்கு ஐ.சி.சி. காட்டுவதில்லை என்பதுதான் பரிதாபம்.

ஐ.சி.சி.யின் நோக்கம், கிரிக்கெட்டை வளர்ப்பது மட்டுமே. வழங்கப்பட்ட டெஸ்ட் அந்தஸ்தை ரத்து செய்வது கிரிக்கெட்டுக்கு எந்த விதத்திலும் உகந்ததாக இருக்காது. அதற்கு பதில் செய்ய வேண்டிய சில விடயங்கள் இருக்கின்றன. வங்கதேசத்தில் வளர்ச்சிக்கு என்று பெரிய தொகையை ஐ.சி.சி. ஒதுக்க வேண்டும். அங்கு கிரிக்கெட்டை ஆரம்பக் கட்டத்தில் இருந்து முறையாக வளர்க்க வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே வங்கதேச அணி கிரிக்கெட்டில் முக்கியத்துவம் பெற முடியும் என்றார் வசிம் அக்ரம்.

## வங்கதேச அணியின் ஆட்டம் பாராட்டும் படியாக இருந்தது

-கங்குலி



வங்கதேச வீரர்களின் ஆட்டம் பாராட்டும்படி இருந்தது.நாணயச் சுழற்சியில் வென்று அந்த அணி முதலில் பந்து வீச எடுத்த முடிவு சரியானது. ஏனென்றால் காலையில் ஆடுகளம் பந்து வீச்சுக்குச் சாதகம் அளிக்கும் வகையில் இருந்தது. காலையில் துடுப்பாட்டம் செய்வது கடினமாக இருந்தது. காலித்மசூத் ஆட்டம் நன்றாக இருந்தது.

வங்கதேச அணித் தலைவர் ஹபிபுல்பாசர் கூறியதாவது:-

எங்கள் அணி வீரர்களின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. இது மகிழ்ச்சியை அளிக்கிறது. தொடக்கத்தில் 3 விக்கெட் சரிந்தாலும் எங்களால் நன்றாக ஆட முடிந்தது.




இனி வரும் போட்டிகளிலும் எங்கள் அணி வீரர்கள் இதே மாதிரி சிறப்பாக ஆடுவார்கள்.

சிம்பாவேக்கு எதிரான தொடரில் சவால் விடும் வகையில் ஆட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றார்.

இந்திய, வங்கதேச அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டியில் வங்கதேச அணி 11 ஓட்டங்களால் தோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஜஸ்ரின் லாங்கர் விளையாடுவது சந்தேகம்

மெல்போர்னில் நடைபெறவுள்ள பாகிஸ்தானுக் கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் ஜஸ்ரின் லாங்கர் பங்கேற்பது சந்தேகமாகும் என தெரிவிக்கப் படுகிறது. அவர் கடந்த வியாழன் பயிற்சியிலீடுபட்டிருந்த வேளை முதுகில் ஏற்பட்ட காயமே இதற்குக் காரணமாகும். இவரின் இடத்துக்கு சைமன் கட்டிச் நியமிக்கப்பட்டுள்ளார். அணியின் உடற்கூற்று நிபுணர் லாங்கர் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

லாங்கர் முதலாவது போட்டியில் ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

## சிறிலங்கா அணியில் லத்திப் மாலிங்க; முரளிதரனுக்கு ஒரு நாள் அணியில் வாய்ப்பு

நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள சிறிலங்கா அணியின் வேகப்பந்து வீச்சாளர் நுவான்சொய்சாவுக்குப் பதிலாக லத்திப் மாலிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இன்று நியூசிலாந்து பயணமாகின்றார். நியூசிலாந்து மத்திய மாவட்ட அணிக்கும், சிறிலங்கா அணிக்கும் இடையில் கடந்த திங்களன்று நடை பெற்ற போட்டியில் நுவான் சொய்சா உபாதைக்கு உள்ளானார்.


இதேவேளை தோளில் ஏற்பட்ட காயம் காரணமாக அணியில் விளையாடும் வாய்ப்பை இழந்திருந்த முரளிதரன் பூரணமாக குணமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

எனினும் முரளிதரன் எதிர்வரும் 28 ஆம் திகதி தேகாரோக்கியம் தொடர்பான ஆய்வுக்கு முகம் கொடுக்க வேண்டும்.



சிறிலங்கா அணியில் இணைந்து கொள்வதற்காக முரளிதரன் சனவரி முதல் வாரம் நியூசிலாந்து செல்வார்எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த யூலை மாதம் தென்னாபிரிக்காவுடன் நடைபெற்ற போட்டியின் பின் முரளிதரன் எந்தவொரு போட்டிகளிலும் கலந்து கொள்ளவில்லை.



இந்த ஆண்டின் சிறந்த ரஷ்ய தடகள வீராங்கனையாக யெலீனா இசின்போவா தேர்வு பெற்று உள்ளார். போல்வால்ட் வீராங்கனையாக யெலீனா இசின்போவா தேர்வு பெற்று உள்ளார்.



மார்ரிடில் ஸ்பானிஸ் லீக் கால்பந்துப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் செவிலா அணி 1-0 என்ற கோல் கணக்கில் ரியல் மாட்ரிட் அணியை வீழ்த்தியது. ரியல் மாட்ரிட் அணியின் நட்சத்திர வீரரான டேவிட் பெக்காமை (இடது) தடுத்து விழச் செய்கிறார் செவிலா அணியின் டேவிட் கேஸ்டடோ.

## இவ் ஆண்டின் சிறந்த வீராங்கனையாக இரட்டைப் பதக்கம் வென்ற ஹோம்ஸ் தெரிவு

எதென்ஸ் ஒலிம்பிக்கில் இரட்டைப் பதக்கங்களை வென்ற இங்கிலாந்தின் வீராங்கனை கெல்லி ஹோம்ஸ் இந்த ஆண்டுக்கான சிறந்த வீராங்கனை என்ற பரிசை வென்றுள்ளார்.

ரொய்ட்டர் நடத்திய தெரிவுப் போட்டியில் 20 நாடுகளைச் சேர்ந்த 33 விளையாட்டு சஞ்சிகை ஆசிரியர்கள் தெரிவுப் போட்டி நிகழ்வில் கலந்து கொண்டனர். முதலாவது இடத்தைப் பெற்ற ஹோம்ஸ் 3 புள்ளிகளையும் சரபோவா 2 புள்ளி களையும் பெற்றனர்.

ஹோம்ஸ் கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற எதென்ஸ் ஒலிம்பிக்கில் 800,1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் 99 புள்ளிகளில் 68ஐப் பெற்றார்.

இந்த வாக்கெடுப்பு கடந்த வாரம் லண்டனில் நடைபெற்றது. 1980ஆம் ஆண்டில் எதென்சில் நடைபெற்ற 1500 மீற்றர் போட்டியில் பிரிட்டனின் செபஸ்தியன் கோயேயும், 800 மீற்றரில் ஸ்ரீவ் ஓவட்டியும் பதக்கம் வென்றனர். ஆனால் ஹோலம்ஸ் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றார்.



இரண்டாவது சிறந்த வீராங்கனையாக மரியாசரபோவா தெரிவானார். இவர் 36 புள்ளிகளைப் பெற்றார். அவர் சுவீடனின் மெய் வல்லுநர் கறோலி னாக்ளப்டையும் கோல் வீராங்கனை அனிகா சொரன்ஸ்டாமையும் வென்று இரண்டாம் இடத்தைப் படித்தார். இவர் விம்பிள்டன் போட்டியில் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உழவர் ஒன்றிய வி.கழகத்தின் செயற்பாட்டுக்கு 3 வருடத் தடை

கிளிநொச்சி உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தின் செயற்பாடுகளுக்கு மூன்று வருடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 24ஆம் திகதி (நேற்று) முதல் தடை அமுலுக்கு வருவதாகக் குறிப்பிட்டுள்ள கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறையினர் நேற்று முன்தினம் (23ஆம் திகதி வியாழன்) கனகபுரத்தில் நடைபெற்ற மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கழக வீரர்கள் மற்றும் அக் கழக ஆதரவாளர்கள் நடந்து கொண்ட முறைகேடுகளின் காரணமாகவே இத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தடைசெய்யப்பட்ட இந்த மூன்று வருட காலத்தினுள்ளும் இக் கழகத்தினர் எவ்வித போட்டியிலும் பங்குபற்ற முடியாது என்பதுடன் இக் கழகம் சார்பில் எவ்வித போட்டியும் நடத்த முடியாது எனவும் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (சோ)

## இங்கிலாந்தின் வீரர் ஹார்மிசன் சிறப்பான பந்து வீச்சாளர்-மெக்ராத்



அவுஸ்திரேலியா அணியின் வேகப் பந்துவீச்சாளர்கிளன் மெக்ராத் தென்னாபிரிக்காவுடனான முதல் டெஸ்ட் போட்டியின் வெற்றிக்கு வழி சமைத்த ஒரு விக்கெட்டை வீழ்த்திய இங்கிலாந்து அணியின் வேகப் பந்துவீச்சாளரான ஸ்ரீவ்ஹர்மிசனைப் பாராட்டியுள்ளார்.

ஹார்மிசன் தர வரிசையில் மெக்ராத்துக்கு அடுத்த படியாக இருப்பதுடன் அடுத்த இரண்டு இடங்களையும் முறையே முரளிதரனும், சொகைப் அக்தரும் பெறுகின்றனர்.


இதனால் தென்னாபிரிக்க அணிக்கு ஹார்மிசன் வரும் போட்டிகளிலும் நெருக்கடியாக இருப்பார் என்றும் மெக்ராத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இனிவரும் நான்கு போட்டிகளை தென்னாபிரிக்க வெற்றி பற்றி எதிர்பார்க்க முடியாது என இங்கிலாந்தின் அணித்தலைவர் மைக்கல்வோன் கூறியுள்ளார்.

ஹார்மிசன் கடந்த பத்து ஆண்டுகளில் சிறப்பாக பந்து வீசியதாலும்,தென்னாபிரிக்காவை அதன் மண்ணில் 4-0 என்ற கணக்கில் டெஸ்ட் போட்டியை வென்றபோது இவர் 17 விக்கெட்டுக்களை வீழ்த்தியதாலும் தரவரிசையில் 4ஆம் இடத்துக்கு முன்னேறினார்.

### கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நாளை (26ஆம் திகதி) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இதில் கிளிநொச்சிப் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து விளையாட்டுக்கழகங்களையும் சேர்ந்த தலைவர், செயலாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (சோ)



## சிந்தனைக்கு

போராட்டவடிவங்கள் மாறலாம்; ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 25-12-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## சூடாக்கப்படும் களம்!

படிப்படியாக களம் சிறிலங்கா அரசினால் சூடேற்றப்பட்டு வருகின்றது. சமாதான முயற்சிகள் என்பன நம்பிக்கையற்ற தொன்றாக இருக்கையில் கள நிலையைச் சூடேற்றும் வகையிலான ஆயுதப்படையினரின் நடவடிக்கைகளினால் நாடு யுத்தத்தை நோக்கி முன்னேறிச் செல்வதாகவே உள்ளது.

கடந்த சில வாரங்களாக வடக்கு-கிழக்கில் சிறிலங்கா ஆயுதப்படையினரின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன காவலரண்கள் புதுப்பிக்கப்பட்டு வருவதோடு, சில இடங்களில் புதிய மண் அரண்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

இதே சமயம் கேந்திர நிலையங்களில் ஆயுதப்படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளதோடு சோதனைக் கெடுபிடிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக முகமாலை, ஓமந்தை போன்ற சோதனைச் சாவடிகளில் ஆயுதப்படையினரின் சோதனைகளும், கெடுபிடிகளும் அதிகரித்துமுள்ளன.

இந்த வகையில் நேற்று ஓமந்தைச்சாவடியில் சிறிலங்கா ஆயுதப்படையினர் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரமாக்கியதால் மக்களின் போக்குவரத்துப் பெரிதும் தாமதப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களையும் அனுபவிக்க வேண்டியதாகியது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள தடங்கல் படிப்படியாக நாட்டில் அமைதிச் சூழ்நிலை குறைந்து வருதல் போன்றவற்றின் வெளிப்பாடே அண்மைக்கால இத்தகைய நிகழ்வாகும். அதாவது நாட்டில் யுத்த நிறுத்தம் இது வரையில் அமுலில் இருந்தாலும் அமைதி நிலைமை எவ்வேளையிலும் மாற்றத்திற்கு உள்ளாகலாம் என்ற எதிர்பார்க்கை பர்வலாகவே உள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்தால் யுத்த நிறுத்த உடன்பாடு அமுலில் இருந்தபோதும் படிப்படியாக இராணுவம் வளர்க்கப்பட்டும், வலுப்படுத்தப்பட்டும் வந்தது.அதாவது இராணுவம் நவீன மயப்படுத்தப்பட்டதோடு ஆயுதப் படையினருக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அரசாங்கத்தால் பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் படிப்படியாக அமைதிச் சூழ்நிலை மாற்றம் காணத் தொடங்கியது. அதிலும் குறிப்பாக கடந்த மாவீரர் நாளுடன் இத்தகைய போக்குத் தீவிரம் பெற்றது எனலாம். எடுத்துகாட்டாக மாவீரர் நாள் நிகழ்வுகளைக் குழப்புவதற்கு சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு மேற்கொண்ட நடவடிக்கைகளைக் குறிப்பிட முடியும்.

நிலைமையைப் பதற்றத்திற்கு உள்ளாக்கும் வகையில் நடவடிக்கைகளில் இறங்கியுள்ள ஆயுதப்படைத்தரப்பு யுத்த நிறுத்தத்தின் பின்னர்அனுமதிக்கப்பட்டு வழமையாகி விட்ட விடயங்களைக் கூட மீண்டும் குழப்பத்திற்கு உள்ளாக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டது. குறிப்பாக இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றுதல், பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிதல் போன்றனவற்றை மீண்டும் விவகாரமாக்க முனைந்துள்ளது.

இது போன்று மக்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் நடவடிக்கைகளினையும் ஆயுதப்படைத்தரப்பு மேற்கொண்டுள்ளது. இவையே சோதனைச் சாவடிகளில் தொந்தரவு, காலதாமதம், சில கைதுகள் போன்றவையாகும். ஆனால் இவையாவும் வேண்டுமொன்றே மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை இழுத்தடிப்புச் செய்தல் அல்லது யுத்தத்தை நோக்கி நாட்டை வழி நடத்திச் செல்லுதல் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றது. ஆகையினால் நாட்டில் பதற்றமானதொரு சூழ்நிலையைத் தோற்றுவித்தல் என்பது அதன் தேவையாக உள்ளது. இதன் வெளிப்பாடே அண்மையில் அதிகரிக்கப்பட்டுவரும் இராணுவக் கெடுபிடிகள் ஆகும்.

சனாதிபதி சந்திரிகாவிற்கு அமைதி, சட்டம், ஒழுங்கு என்பவற்றிற்கு உட்பட்டதான ஆட்சி ஒன்றை மேற்கொள்வதென்பது தற்பொழுது சாத்தியப்பாடானதொன்றாக இல்லை. ஏனெனில் இவற்றின் ஊடாக சனாதிபதி சந்திரிகாவினால் தனது ஆட்சி ஆதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும், தனது ஆட்சி அதிகாரத்தை நீடிக்கவும் வாய்ப்பில்லை ஆகையினால் அமைதி , சட்டம், ஒழுங்கு என்பனவற்றை கேள்விக்குள்ளாக்கும் யுத்த சூழ்நிலை அதாவது கெடுபிடியான சூழ்நிலை ஒன்று சனாதிபதிக்குத் தேவையாகவுள்ளது. இதனை நோக்கமாகக் கொண்டே தற்பொழுது சனாதிபதி சந்திரிகாவினால் நாடு வழிநடத்தப்படுகிறது.

# தற்காலிக விசாவுடன் இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர் கைதாவர்

### சிறீலங்கா அரசாங்கம் அறிவிப்பு

தற்காலிக விசா செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த பின்னரும் இலங்கையில் தங்கியிருக்கும் வெளி நாட்டவர்களுக்கு அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்படுவதாகவும். அதற்குப் பின்னர் இங்கு இருந்தால் கைது செய்யபட்டு வழக்குத் தொடரப்படும் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு சட்ட ஒழுங்கு அமைச்சு அறிவித்துள்ளது.

பத்தாயிரத்திற்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் காலா வதியான விசாக்களுடன் சிற்றுண்டிச் சாலைகள், நகைக்கடைகள் போன்ற வர்த்தக நிலையங்களில் வேலைபார்த்துக் கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் அதிகமானோர் ஆசிய நாடுகளைச் சேர்ந்த வர்கள். இந்தக் காலக்கெடு முடிவடைந்ததும் வெளிநாட்டவர்க்ளை இவ்வாறு வேலைக்கு அமர்த்தியிருக்கும் சகல நிறுவனங்களையும் அமைப்புக்களையும் சோதனையிட்டு அவர்களைக் கைது செய்யுமாறு பொலிசாருக்கும் ஏனைய சட்ட அமுலாக் கல் உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்கப் பட்டிருப்பதாக அமைச்சின் செயலாளர் திலக்ரணவிராஜ தெரிவித்துள்ளார்

தற்காலிக விசாக்களைப் புதிப்பிப்பதற்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யுமாறு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

### சனவரி முதலாம் திகதியை

# தேசிய வீரர்கள் தினம் என தேசப்பற்றாளர் இயக்கம் பிரகடனம்

சனவரிமாதம் 10ஆம் திகதியை தேசிய வீரர்கள் தினம் எனப் பெயரிட்டு சிறிலங்கா தேசியக் கொடியை அரச கூட்டுத் தாபன நிறுவனங்களில் பறக்க விடுமாறு தேசப்பற்றாளர் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. நாட்டை அடிமைத்தனத்தில் இருந்து மீள்வதற்குசகல நடவடிக்கைகளையும் எமது இயக்கம் ஆரம்பித்துள்ளதென தேசப்பற்றாளர் இயக்கத்தின் புதிய தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

# மாவின் தட்டுப்பாட்டைப் போக்க மலேசியாவிலிருந்து மா இறக்குமதி

தற்பொழுது ஏற்பட்டுள்ள மாவின் தட்டுப்பாட்டை உடன் நீக்குவதற்கு மலேசிய நாட்டில் இருந்து பத்தாயிர்ம் மெட்ரிக் தொன் கோதுமை மா இறக்குமதி செய்யவள்ளதாக வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் ஜெயராஜ் பர்னாண் டோபுள்ளே தெரிவித்துள்ளார். இறக்குமதி செய்யப் படவுள்ள இந்த மாவில் 80 சதவீதமானவை வெதுப்பக உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு அமைச்சர் தீர்மானம் எடுத்துள்ளார். இறக்குமதி செய்யப் பட்டுள்ள மாவை 25 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு வர்த்தக வாணிபத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

# வரவு — செலவுத்திட்டம் குறித்து அமைச்சர் ஜெயரட்ண அதிருப்தி

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சிரேஷ்ட அமைச்சரான டி . எம .ஜெயரட்ண மீண்டும் ஒரு முறை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை விமர்சனம் செய்துள்ளார். தாம் வகிக்கும் மலைநாட்டு அபிவிருத்தி அமைச்சுக்கு உரிய வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றே குற்றம் சுமத்தியுள்ளார். அண் மையில் அவர் இந்தக் குற்றச்சாட்டை சுமத்திய போது அதனை நிதி அமைச்சர் சரத் அமுனுகம மறுத்திருந்தார். எனினும் மீண்டும் அமைச்சர் ஜெயரடண இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்துள்ளமையானது இருவருக்கும் இடையிலான முறுகலை அதிகரித்துள்ளது (32)

# மகாவலிப் பண்ணைக் கோழிகள் இறப்பிற்கும் தொற்றுக் காய்ச்சலுக்கும் தொடர்பில்லை

### சப்ரகமுக சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

சப்ரகமுவ மாகாணத்தின் துங்கமவில் உள்ள மகாவலிப் பண்ணையில் கோழிகள் இறப்பதற்கும் எம்பிலிப்பிட்டிய பகுதியில் ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் தொற்று நோய்க்கும் சம்பந்தமில்லை என சப்ரகமுவ மாகாண சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். மகாவலிப்பண்ணையில் கோழிகள் இறப்பதாக தகவல் கிடைத்ததும் அந்தப் பண்ணை மூடப்பட்டுள்ளது. இதனை அடுத்து அங்கு சென்று பார்த்த வேளையில் அந்தக்கோழிகள் இறப்பதற்கான காரணம் ஏவியன் லீவ் கோஸிஸ் என தெரியவந்துள்ளது. இந்த நோயானது கோழிகளில் இருந்து மனிதர்களுக்கு பரவுவதற்கு வாய்ப்புகள் இல்லை என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் எம்பிலிப்பிட்டியவில் பரவியுள்ள இன்புளுவன்ஸா தொற்றுக்கும் இந்தக் கோழிகள் இறப்பதற்கும் சம்பந்தமில்லை என்பது தெரியவந்துள்ளது. இதேவேளை இந்த நோய் பறவைக் காய்ச்சல் எனக்கூறப்பட்டதிலும் எவ்வித உண்மையுமில்லை என சப்ரகமுக சுகாதார அமைச்சர் கூறியுள்ளார் (32)

# அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படுமாம்

வரவு செலவுத்திட்டத்தின்படி அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வுகள் இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் வழங்கப்பட்ட போதும் அண்மையில் பரிந்துரைக்கப்பட்ட சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ள நிலையிலேயே அரசாங்கம் இதனை அறிவித்துள்ளது. வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு 30 வீத சம்பள உயர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

# இலத்திரனியல் வாக்குப்பதிவு பற்றி ஆராய கட்சித்தலைவர்கள் குழு பயணம்


இலத்திரனியல் முறை மூலம் இலங்கையில் தேர்தலை நடத் துவது குறித்து ஆராய்வதற்காக கட்சித் தலைவர்கள் குழு ஒன்று வெளி நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ள விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையாளர் தலைமையில் இந்தியா, அமெரிக்கா, கனடா, ஜேர்மனி மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுக்கு இந்தக் குழுவினர் விஜயம் செய்யவுள்ளனர். தற்போது இலத்திரனியல் வாக்குபதிவினை வெற்றிகரமாக செயற்படுத்தும் இந்த நாடுகளின் தேர்தல் நடைமுறை குறித்து இந்தக குழுவினர் ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலத்திரனியல் முறை மூல வாக்களிப்பை அறிமுகப்படுத்துவதற்கு ஏற்ற வகையில தேர்தல் திருத்தச் சட்டமூலம் மாற்றியமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் தினேஷ்குணவர்த்தன கூறியுள்ளார்.

(32)

## மட்டு.இல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு
## மேஜர் செங்கோலன் நினைவாக நிதியுதவி

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் செங்கோலனின் 12ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது குடும்பத்தினரால் கிழக்கு மாகாணத்தில்



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், விடுதலைப் புலிகளின் நவம் அறிவுக் கூடத்தின் வளர்ச்சிக்குமாக பதினொரு இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 6.00 மணிக்கு இயக்கச்சி கோவில் வயல் பாடசாலையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

மேஜர் செங்கோலனின் நினைவாக புலம்பெயர் நாட்டில் வசித்து வரும் அவரது சகோதரனான பொ. சுதனால் அவரது நண்பர்கள் விக்கினேஸ்வரன், க. சுதர்சன், க. சிவநேசன், சி. சுவேந்திரன், நா. நந்தகுமார், ப. றுபேஸ், க. கபிலன், சோ. துஸ்யந்தன் ஆகியோரிடம் பெறப்பட்ட பத்து இலட்சம் ரூபா நிதியினை செங்கோலனின் தந்தையாரான பொன்னுத்துரை, தாயரான பார்வதிப்பிள்ளை ஆகிய இருவரும் இணைந்து தமிழீழ மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரனிடம் தமிழீழத் தேசியத் தலைவர் நிதியத்தில் வைப்புச் செய்து கிழக்கு மாகாணத்தில் வெள்ளப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு உதவுமாறு கையளித்தனர்.

அடுத்த ஒரு இலட்சம் ரூபா நிதியை மேஜர் செங்கோலனின் சகோதரனின் துணைவியான செல்வராணி நவம் அறிவுக் கூடத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துமாறு நவம் அறிவுக் கூடப் போராளி அன்புக்கரசனிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் கந்தம்மான், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து மேஜர் செங்கோலனின் திரு வுருவப்படத்திற்கான சுடரினை செங்கோலனின் பெற்றோர் ஏற்றி வைத்து மலர் மாலை அணிவித்தனர். இதனைத் தொடர்ந்து போராளிகள்



உடபடப் பலரும் மலர் வணக்கம் செலுத்தினர்.

அடுத்து அஞ்சலி உரையை மக்கள் தொடர்பகப் பொறுப்பாளர் வின்சன் நிகழ்த்தினார். சிறப்புரையை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் நிகழ்த்தினார். மேஜர் செங்கோலனின் குடும்பத்தினர் அப்பகுதியைச் சேர்ந்த மாவீரர் குடும்பங்களுக்கும், வெள்ளப் பாதிப்புக்குள்ளாகிய குடும் பங்களுக்கும் செங்கோலனின் நினைவாக நான்கு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான நிதியை முன்னரும், வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(லோ, ச, 11)

## கனடாவிலுள்ள சிறிலங்கா தூதரக சிங்கள- முஸ்லிம் ஊழியர்கள் தலைமறைவு

கனடாவில் உள்ள சிறிலங்கா தூதுவராலயத்தில் பணிபுரிந்த ஊழியர்கள் பலர் தலைமறைவாகி விட்டதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் சிலர் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இது தொடர்பாக ரொறன்ரோ சிறிலங்கா தூதுவராலய அதிகாரி ஒருவரோடு தொடர்புகொண்டு கேட்ட போது இந்தச் செய்தியை மறுக்கவோ உறுதிப்படுத்தவோ மறுத்துவிட்டார். தலைமறைவாகிப் போன ஊழியர்களில் பெரும்பாலானோர் சிங்கள ஊழியர்கள். மற்றவர்கள் முஸ்லிம்கள் ஆவர். முன்னைய காலங்களிலும் சிறிலங்கா தூதுவராலய ஊழியர்கள் தங்கள் பணிக்காலம் முடியும் தறுவாயில் அரசியல் தஞ்சம் கோரி இருக்கிறார்கள். சிங்கள-முஸ்லிம் அகதி கோரிக்கையாளர்களுக்கு எந்த அடிப்படையில் கனேடிய அரசு தஞ்சம் அளிக்கப் போகிறது என்பது தெரியவில்லை.

## இயக்கச்சியில் மிதிவெடி வெடித்து இளைஞர் ஒருவர் படுகாயம்

இயக்கச்சிப் பகுதியில் மிதிவெடி வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 11.30 மணியளவில் இயக்கச்சி கிருஷ்ணர் கோவிலை அண்டிய பகுதியில் உழவு இயந்திரத்தில் மண் ஏற்றுவதற்காக மண் வெட்டியால் மண்ணை வெட்டிக் கொண்டிருந்த இளைஞரே மிதிவெடி வெடித்ததில் படுகாயமடைந்தவராவார். மண்ணை வெட்டும் போது மிதிவெடியின் மேல் வெட்டுப்பட்டதனாலே மிதிவெடி வெடித்ததாக தெரியவரும் இதே வேளை காயமடைந்த கரந்தாய்க்குளம் எனும் முகவரியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஜீவதாஸ் வயது 22 எனும் இவ் இளைஞரை சிகிச்சைக்காக கிளிநொச்சி அரசினர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின். மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், தெரிய வருகிறது. (11)

## மொறட்டுவ பல்கலை மாணவர்களால் பௌதீகவியல் இணைந்த கணித கருத்தமர்வு

தமிழீழக் கல்விக்கழகம், கிளிநொச்சி கல்வித்திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டுடன் "மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்களால்" 26,27,28ஆம் நாட்களில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை க.பொ.த உயர்தரம் 2005 தேர்வில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பௌதீகவியல், இணைந்த கணி தம் ஆகிய பாடங்களுக்கான கருத் தமர்வு நடைபெறவுள்ளது. மாணவர்கள் தமது உணவையும் கொண்டு வருமாறு கேட்கப்படுகின்றனர்.

## மீளக்குடியமர்வு நிவாரணம் பெற்றோருக்கு உலருணவு நிவாரணம் நிறுத்த நடவடிக்கை

(அவலுவலகசெய்தியாளர்)

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணம் மீளக் குடியமர்வு கொடுப்பனவினைப் பெற்ற ஒரு பகுதியினருக்கு நிறுத்தப்படவுள்ளதாகவும், அதற்கான நட வடிக்கைகளை பிரதேச செயலகங்கள் மூலம் உடன் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், 2003ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்பதாக மீளக்குடியமர்வுக் கொடுப்பனவினைப் பெற்றுக் கொண்ட குடும்பங்களுக்கு 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையிலான உலர் உணவு நிவாரணத்தினை மட்டும் வழங்கும்படியும் அதற்குப் பிற்பட்ட மாதங்களுக்கான உலர் உணவு முத்திரையினை மீளப்பெற்று அந்தந்த பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறும் கிராமசேவை அலுவலர்களுக்கு பிரதேச செயலகங்கள் பணிப்புரை விடுத்துள்ளதாகவும். தெரியவந்துள்ளது.

பலத்த சிரமங்களுக்கு மத்தியில் மீளக் குடியமர்ந்து மீண்டும் வெள்ள அனர்த்தங்களின் பாதிப்புக்குள்ளாகி அல்லலுறும் மக்களுக்கு மேற்படி நடவடிக்கையானது பேரிடியாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடக்கூடிய தென்றாகும் (சோ)

## -இடமாற்றத்தைக் கண்டித்து-
## வவு. பொது வைத்தியசாலைத் தாதியர் போராட்டம் நடத்த ஏற்பாடு

வவுனியா பொது வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தரிடம் மாற்றத்தைக் கண்டித்து சுகவீன லீவுப் போராட்டம் நடாத்தப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொது வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு பொது வைத்திய தாதியர் சங்கம் வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ரட்நாயக்கவை கடிதம் மூலம் கோரியுள்ளது. தமது கோரிக்கைக் கிணங்க 72 மணித்தியாலயத்தினுள் இடமாற்றத்தை இரத்துச் செய்யவில்லையாயின் எதிர்வரும் 30.12.2004 முதல் சுகவீன லீவுப் போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாக வவுனியா பொது வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

(10)

## சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் நியமனத்தில் தேர்தல் ஆணையாளர் அதிருப்தி

இலங்கையில் சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ள 5 உறுப்பினர்கள் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அதிருப்தி வெளியிட்டுள்ளதோடு அந் நியமனம் தொடர்பாக விமர்சனம் செய்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான கருத்தரங்கொன்றில் உரையாற்றிய அவர் சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட எவருக்கும் தேர்தல் தொடர்பாக எவ்வித அனுபவமும் இல்லை. தேர்தல் பற்றிய செயற்றிறன் மிக்கவர்கள்தான் இதற்கு நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.இப்படி அனுபவமற்றவர்கள் மூலம் சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் இருக்க மாட்டாதென்றும் கூறியுள்ளார். (32)

## ஓமந்தை சோதனைச் சாவடியில் தமிழ் யுவதி ஒருவர் கைது

வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடியில் 16 வயது யுவதியொருவர் நேற்று முன்தினம் மாலை பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து வவுனியா வந்த சமயம் கைது செய்யப்பட்ட இவர் திருகோணமலை அன்புவழிபுரத்தைச் சேர்ந்த செல்லத்துரை துளசிமணி என தெரிவிக்கப்படுகின்றது. இந்த யுவதி வைத்திருந்த தேசிய அடையாள அட்டை போலியானது எனக் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், நீதிமன்றம் ஊடாகப் பெற்றோரிடம் ஒப்படைக்கவிருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

### சீனாவிடம்...

கையாளர் ஒருவர் கேட்ட கேள்வியொன்றுக்குப் பிரதமர் கருத்துக் கூற மறுத்தமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

இதேநேரம் சீனா விமான சேவைக்கு விசேட சலுகைகளையும் வழங்கியுள்ளதாகவும் அறிய முடிகிறது.

### சிறில....

இதேநேரம் ஊவா மாகாணத்திலுள்ள குடஓயா காட்டிலும் சர்வதேச தரத்தில் விமான ஓடுபாதை அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய நகர்வால பிராந்திய அரசியலில் செல்வாக்குச் செலுத்த முனையும் இந்தியாவும், சீனாவும் பாரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாகவும் இணையத்தளம் ஒன்று கூறுகின்றது. (36,17)

### சட்டத்....

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின்,இலவசச் சட்ட உதவிகள் மையத்தின் முன்பாக இடம்பெற்ற இம்மறியல் போராட்டத்தினால் அதன் பணிகள் நேற்று முற்றாகத் தடைப்பட்டிருந்தன.

காலை முதல் அலுவலக வாயிலில் திரண்ட அன்னையர் முன்னணியினரதும், காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தினதும் பிரதிநிதிகள் பிரதான நுழைவாயிலை வழிமறித்து மறியலில் ஈடுபட்டனர்.

குறிப்பாக யாழ்.மேல் நீதிமன்றில் இடம்பெற்றுவரும் ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணையின்போது அரசதரப்பில் ஆஜரான அரச சட்டத்தரணியான செல்வி.சுகந்தி கந்தசாமியினால் தாக்கல் செய் யப்பட்ட மனுவிற்கு தமது ஆட்சேபனையினைத் தெரிவித்தும் குடா நாட்டைச் சேர்ந்த சட்டத்தரணிகள் எவரும் இவ்வழக்குகளில் ஆஜராகி உதவாததைக் கண்டித்துமே இம்மறியற் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மதியம் தாண்டி இடம்பெற்ற இம்மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் தமது கண்டனங்களை வெளிப்படுத்தும் வகையிலான சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

"யாழ்.குடா நாட்டில் சட்டத் தொழிலை மேற்கொண்டிருக்கும் சட்டத்தரணிகளில் பலர் நீண்ட காலமாகவே இங்கு வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அனைவரிற்கும் குறித்த காலப்பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போகச் செய்யப்பட்ட அசம்பாவிதம் பற்றி நன்றாகத் தெரியும். ஆனால் இவ்விடயத்தினில் ஏனோதானோவென அவர்கள் கவலையீனமாக இருந்து வருகின்றனர். என அன்னையர் முன்னணிப் பிரதிநிதியொருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

(27,33)

### ஆயிரக்கணக்கில்...

யர்கள், பனை தென்னை அபிவிருத்திச்சபை ஊழியர்கள்,மாதர் அமைப்பினர், தேசிய எழுச்சிப் பேரவையினர், பொது மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். (28,33,27)

### யாழ்...

வலிகாமம் பகுதிகளில் நடாத்தப்படவுள்ள தொடர் வெகுசனப் போராட்டங்களின் ஓர் அங்கமாகவே பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் மீண்டும் பொங்குதமிழ் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இப் பொங்கு தமிழ் நிகழ்விற்கான முழு அளவிலான ஏற்பாடுகளையும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் செய்து வருகின்றது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.